ஓம் சிவம்
திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு அ } மெய்கண்டான்யாண்டு-எளஎ சித்திரைத் திங்கள் 1930ஆ ஏப்ரல்மீ--மேமீ { பரல் ச

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

தனித்திருக் குறுந்தொகை.

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே.

ஒரு பெரிய இரத்தினத்தினுடைய ஒளிபோல் சோதி உருவமாய் விளங்குகிற கடவுள், ஒரு விறகுக் கட்டையில் தீ மறைந்து அடங்கியிருத்தல் போலவும், நல்ல பாலில் நெய் மறைந்து அடங்கியிருத்தல் போலவும், உலகிலுள்ள உயிர்ப்பொருள் உயிரில் பொருள் ஆகிய எல்லாப் பொருள்களிலும் ஊனக் கண்ணாற் பார்ப்பவர்களுக்குத் தோன்றாமல், மறைந்திருக்கின்றான். அப்படி மறைந்திருக்கிற கடவுள், ஒருவன் விறகுக் கட்டையை ஒரு கோலிற் கயிற்றைச் சுற்றிக் கடைந்த பொழுது விறகுக் கட்டையிலிருந்து தீ வெளிப்படுதல் போலவும், நல்ல பாலை மத்திற் கயிற்றைச் சுற்றிக் கடைந்தவழிபாலிலிருந்து நெய் வெளிப்படுதல் போலவும், மக்கள் தாங்கள் கடவுளிடத்தில் தங்களுடைய உண்

மையான அன்பைத் தங்கள் அறிவுகொண்டு செலுத்தி ஒழுகினால் அவர் களுடைய உண்மை அறிவுக்கண்ணுக்கு (ஞானக்கண்ணுக்கு) வெளிப் பட்டு நிற்பன்.

முதல் வரியிலுள்ள இரண்டாவது இல்உவமவுருபு. உறவு=அன்பு. உணர்வு=உண்மை அறிவு. தீயினன் என்பதை தீயில்+நன் எனப் பிரிக்க. முதல் இரண்டு வரிகளும் ஒரு வாக்கியம். சோதியான் - எழு வாய், நின்றுளன் - பயனிலை. பின் இரண்டு வரிகளுக்கும் - அவன் - தோன்றா எழுவாய், நிற்குமே - பயனிலை. விறகில் தீ என்ற உவமான மும், பாலில் நெய் என்ற உவமானமும் கடவுளைத் தங்கள் உள்ளத்தில் மறைந்து நின்று பொதுவாய் ஆண்டு கொண்டிருக்கிறவன் என்று அறி யாத(பெத்தான்மாக்களுக்கு) பந்தத்தையுடைய அல்லது கட்டையுடைய ஆன்மாக்களுக்குக் கூறப்படும் உவமானங்கள். அவர்களில் விறகில் தீ மறைந்திருத்தலைக் கூர்ந்த மதியினர் அறிதற்கும், பாலில் நெய் மறைந்திருத்தலை மந்த மதியினர் அறிதற்கும் உவமைகளாகக் கூறப்பட் டன.

மக்கள் ஞாயிற்றை (சூரியனை) ஞாயிற்றினொளியால் பார்க்க முடி யுமே யன்றி விளக்கொளி முதலிய பிற ஒளிகளால் பார்க்க முடியாது. அதுபோல் அவர்கள் கடவுளை அவனுடைய அருளறிவினாற் பார்க்க முடியுமே யன்றி உயிரறிவினால் அறிய முடியாது என்னுங் கருத்து இத் தேவாரத்தில் கூறப்பட்டது. முதல் இரண்டு வரிகளிலும் கடவுள் அருட்கண்ணில்லாதவர்க்குத் தோன்றாமலிருப்பதும், பின் இரண்டு வரிகளிலும் கடவுள் அருட்கண்ணுள்ளோர்க்கு வெளிப்படுதலும் கூறப் பட்டன. இக்கருத்தினைக் கீழ்வருஞ் செய்யுட்களாலறிக.

'எங்குந்தான் வியாபி யாய்நின் றுணரும்இவ் ஆன்மா வென்னில்
தங்கிடும் அவத்தை போக்கு வரவுகள் சாற்றல் வேண்டும்
பங்கமார் புலனொன் றொன்றாப் பார்த்திடல் பகரல் வேண்டும்
இங்கெலாம் ஒழிந்தா னிற்ப தெங்ஙனம் இயம்பல் வேண்டும்.

((சித்தியார் சூத் - ௪, அதி - ௨)

'அருட்கண்ணி லாதார்க்கு அரும்பொருள் தோன்றா
அருட்கண்ணு ளோர்க்கு எதிர் தோன்றும் அரனே
இருட்கண்ணி னோர்க்குஅங்கு இரவியுந் தோன்றாத்
தெருட்கண்ணி னோர்க்குஎங்குஞ் சீரொளி யாமே. (திருமந்திரம்)

மா. வே. நெல்லையப்பபிள்ளை.

பெருமிழலைக் குறும்ப நாயனாரது திருப்பதி

[கும்பகோணம் T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள்]

சிவனடியார் அறுபத்துமூவருள் ஒருவராகிய பெருமிழலைக் குறும்பநாயனார் வாழ்ந்து வீடுபேறெய்திய திருப்பதி பெருமிழலை என்பது திருத்தொண்டர் புராணம் படித்தோர் யாவரும் நன்கறிந்ததொன்றாம். இஃது இங்ஙனமாக, சைவ சமயாசாரியர்களால் பாடப்பெற்றதும், திருஞான சம்பந்தருக்கும் திருநாவுக்கரசருக்கும் படிக்காசு அருளப்பெற்றதுமாகிய திருவீழிமிழலை என்னும் திருப்பதியே இந்நாயனாரது பெருமிழலை எனக்கொண்டனர் பிற்காலத்தினர். ஆதலால், இத்திருப்பதிகள் இரண்டும் ஒன்றோ ? அன்றிவேறோ ? வேறாயின் பெருமிழலை யாண்டையது ? என்பவற்றை ஆராய்வாம்.

சுந்தரமூர்த்திகள் அருளிய திருநாட்டுத் தொகையிலுள்ள 'மிழலைநாட்டு மிழலையே வெண்ணிநாட்டு மிழலையே' என்ற அடியால் மிழலை என்னும் பெயருடைய திருப்பதிகள் இரண்டு உண்டு என்பது வெளியாகின்றது. அன்றியும் இவ்விரு மிழலைகளுள் ஒன்று மிழலை நாட்டிலும் மற்றொன்று வெண்ணி நாட்டிலும் இருத்தல் வேண்டுமென்பது அவ்வடியாலே அறியப்படுகின்றது. ஆசிரியர் சேக்கிழார் நமது குறும்பநாயனாரது திருப்பதி, மிழலை நாட்டிலுள்ள பெருமிழலை என்று மிகத்தெளிவாய்க் கூறியுள்ளனர். இதனை,

> சூதநெருங்கு குலைத்தெங்கு பலவுபூகஞ் சூழ்புடைத்தாய்
> வீதிதோறு நீற்றினொளி விரியமேவி விளங்குபதி
> நீதிவழுவா நெறியினராய் நிலவுங்குடியா னெடுநிலத்து
> மீதுவிளங்குந் தொன்மையது மிழலைநாட்டுப் பெருமிழலை
>
> —பெரியபுராணம், குறும்ப 1.

என்ற பாடலால் உணர்க. அன்றியும் அவ்வாசிரியர் வீழிமிழலையை மிழலை நாட்டிலுள்ள திருப்பதி என்று யாண்டும் குறிப்பிடவில்லை. ஆதலால் அவர் வீழிமிழலையும் பெருமிழலை

யும் வெவ்வேறு திருப்பதிகள் என்றே கருதியுள்ளாரென்பது ஒருதலை. எனவே, சுந்தரமூர்த்திகள் கூறியுள்ள மிழலைநாட்டு மிழலையும் வெண்ணிநாட்டு மிழலையும் முறையே பெருமிழலையும் வீழிமிழலையுமாயிருத்தல் வேண்டும் என்பது நன்கு துணியப் படும். ஆகவே இவ்விரண்டும் வெவ்வேறு திருப்பதிகளேயாம். இங்ஙனமே, ஆனாய நாயனாரது மங்கலமும்,[1] ஏயர்கோன் கலிக் காம நாயனாரது பெரு மங்கலமும்,[2] அரிவாள் தாயநாயனாரது கணமங்கலமும்,[3] பொதுவாக மங்கல மெனப் படினும் அவை வேறுவேறு திருப்பதிகளாயிருத்தல் ஈண்டு அறியத்தக்கது. இத் துணையுங் கூறிய வாற்றால், பெருமிழலைக் குறும்பநாயனாரது திருப்பதி வெண்ணி நாட்டு வீழிமிழலை யன்றென்பதும், மிழலை நாட்டுப் பெருமிழலையேயாம் என்பதும் இனிது புலப்படும்.

இனி, மிழலை நாட்டிலுள்ள பெருமிழலை எவ்விடத்துள்ளது என்பதைத் துருவி நோக்குவாம். முற்காலத்தில் சோழமண் டலம் ஒன்பது வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

அவற்றுள் இராசேந்திர சிங்கவளநாடு என்பதும் ஒன்று கும். ஒவ்வொரு வளநாடு பலநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந் தது; எனவே, இராசேந்திர சிங்கவளநாட்டிலும் பல உள்நாடு கள் இருந்திருத்தல் வேண்டும். இவ்வளநாடு இருபத்திரண்டு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்த தென்பது கல்வெட்டு ஆராய்ச் சியால் புலப்படுகின்றது; அவற்றுள் மிழலைநாடு என்பதும் ஒன் ருகும். இதனை 'இராஜேந்திர சிங்கவளநாட்டு மிழலைநாட்டுச் சேய்நலூர் சபையார் இடக்கடவ திருமெய்க்காப்பு ஒன்றும்†' என்ற கல்வெட்டுப்பகுதியால் நன்குணரலாம் இக்கல் வெட்டில் குறிக்கப்பெற்றுள்ள சேய்நலூர், அறுபான் மும்மை நாயன்மார் களுள் ஒருவராகிய சண்டேசுவரநாயனார் திருவவதாரம் செய்த ருளியதும் மண்ணியாற்றின் கரையில் உள்ளதுமான திருச்சேய்

1. பெரியபுராணம், ஆனாயநாயனார் புராணம்—7.
2. " ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் —1.
3. " அரிவாள்தாய நாயனார் புராணம்—1.

† South Indian Inscriptions Vol II Part III PP 331.

ஞலூரேயாகும். இத்திருச்சேய்ஞலூர் மிழலை நாட்டிலுள்ளது என்பது மேற்குறித்த கல்வெட்டால் புலப்படும் செய்தியாகும். இத்திருப்பதிக் கண்மையில் இரண்டுமைலில் மிழலை என்ற அழிந்த ஊர் ஒன்று உள்ளது. இஃது இப்பொழுது கும்ப கோணத்திலிருந்து நான்கு மைல் தூரத்தில் சென்னைக்குப் போகும் பெருவழியில் உள்ளது. யாம் நேரிற் சென்று அதனைப் பார்த்தபோது அழிவுற்ற நிலையிலுள்ள ஒரு பழைய சிவாலயம் அங்கே காணப்பட்டது. எக்காரணத்தாலோ அச்சிவாலயமும் அதனைச் சூழ்ந்துள்ள ஊரும் அழிந்துபோய்விட்டன. அவ் வூரினர் அதற்கருகிலுள்ள களம்பரம் என்ற ஊரில் குடியேறி யுள்ளனர். மிழலையும் அதிலுள்ள சிவாலயமும் பழையநாளில் நல்ல நிலையில் இருந்திருத்தல் வேண்டும். அழிவுற்ற அவ்வால யத்திலுள்ள படிமங்கள் அதில் ஒரு புறத்தில் புதியதாக அமைக் கப்பெற்றுள்ள ஒரு சிறு அறையுள் வைக்கப்பெற்று வழிபாடு செய்யப்பட்டு வருகின்றன. அவ்விடத்திற் பெருமிழலைக்குறும் பநாயனாரது படிமம் இன்றும் உள்ளது. ஆகவே, புலவர் பெரு மானாகிய சேக்கிழார், குறும்பநாயனாரது திருப்பதியாகக் கூறி யுள்ள பெருமிழலை மிழலைநாட்டிலுள்ள இம்மிழலையே யாதல் அறிந்து கொள்க.

இனி, சேக்கிழாரடிகள் குறும்பநாயனாரது திருப்பதி பெரு மிழலை என்றன்றோ உரைத்துள்ளனரெனின், கூறுவாம். பாப நாசம் தாலுக்காவிலுள்ள மிலட்டூர் முற்காலத்தில் பெருமிலட்டூர் என்று வழங்கிற்று என்பது 'நித்தவிநோத வளநாட்டுக் கிழார்க் கூற்றத்துப் பெருமிலட்டூர் ஊரார் யாண்டு இருபத்தொன்பதா வது முதல் காசு ஒன்றுக்கு ஆட்டைவட்டன் முக்குறுணி நெல் லுப் போலிசையாகத் தஞ்சாவூர் ஸ்ரீராஜராஜேஸ்வரம் உடை யார் பெரும் பண்டாரத்தேப் ஆடவல்லான் என்னும் மரக்கா லால் அளக்கக் கடவர்களாகக் கொண்ட காசு இருநூறினால் ஆண்டாண்டுதோறும் அளக்கக் கடவநெல்லு ஐம்பதின் கலம்' (South Indian Inscriptions Vol II No 6.) என்னும் கல்வெட்டினால் புலப்படுகின்றது. இதனைப்போலவே, தஞ்சா

லூர்த் தாலுக்காவிலுள்ள ஆற்காடு என்னும் ஊர் பழையநாளில் பேராற்காடு எனவும் சீநக்கவள்ளலுக்குரிய ஊர்களுள் ஒன்றாகிய அரசூர் பேரரசூர் எனவும் வழங்கிவந்தன என்று தெரிகிறது. (South Indian Inscriptions. Vol II Introduction Page 26.) எனவே, பெருமிலட்டூர், பேராற்காடு, பேரரசூர் என்று முற்காலத்தில் வழங்கிய ஊர்கள் முறையே மிலட்டூர், ஆற்காடு, அரசூர் என்று தற்காலத்தில் வழங்குவதுபோல, நமது குறும்பநாயனாரது திருப்பதியாகிய பெருமிழலையும் இஞ்ஞான்று மிழலை என வழங்குகின்றது என்றுணர்க.

சிவஞான போதக் கருத்து

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.]

முகவுரை

சிவஞான போதம் என்பது ஏறக்குறைய எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னே மெய்கண்ட தேவரால் அருளிச்செய்யப்பட்ட ஒரு சித்தாந்த நூல். சித்தாந்தம் என்பது முடிந்த முடிபாகிய உண்மை (absolute truth) யாகும்; அதற்கு மேல் உண்மையில்லை. சித்தாந்தம் எனினும் ஆகமாந்தம் எனினும் ஒக்கும். சித்தாந்த உண்மையை உணர்த்தும் இந்தச் சிவஞான போத நூலானது முதலாவது சிவபெருமானால் சிவகணங்களுக்குத் தலைவராகிய நந்தி யெம்பெருமானுக்கு உணர்த்தப் பட்டுப் பின் நந்தி யெம்பெருமானால் சனற்குமார முனிவருக்கு உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சிவஞானபோதம் இறுதிப் பாயிரத்தில் "எந்தை சனற்குமாரன் ஏத்தித் தொழ இயல்பாம் நந்தி யுரைத்தருளும் ஞானநூல்" எனக் கூறப்பட்டுள்ளது. சனற்குமார முனிவர் கேட்க நந்தியெம்பெருமான் உரைத்த நூலை மெய்கண்ட தேவர் எழுநூறு ஆண்டுகளுக்கு முன் இக்காலத்துக்கு ஏற்ப ஏது திருட்டாந்தங்களுடன் கூறியருளினார். அந்நூல் மக்களுடைய அக இருளை அகற்றும் பன்னிரண்டு சூத்திரங்களையுடையது. இந்தப் பன்னிரண்டு சூத்திரங்களை

யும், பன்னிரு பகுதிகளாக்கி அவற்றிற் கூறப்படும் உண்மைகளைக் கூடியவரை படிப்பவர்கள் எளிதில் அறியும் வண்ணம் எளிய நடையில் எழுதித் தரவேண்டுமென்று 'செந்தமிழ்ச் செல்வி' பத்திராதிபர் கேட்டுக் கொண்டபடி இறைவன் திருவருளைத் துணையாகக் கொண்டு சிவஞான போதக் கருத்து எழுதப்படுகின்றது. அதிற் குற்றங்குறைகளிருப்பின் அறிஞர்கள் ஏதுக்களுடன் எடுத்துக் காட்டுவார்களாக.

2. சிவஞான போத நூலிற் கூறப்படுவன கடவுள், உயிர், உலகம் என்னும் முப்பொருள்கள், இம்முப் பொருள்கள் பற்றியன்றி மக்களால் அறியப்படும் உண்மைகள் ஒன்றும் இல்லை. இந்த முப்பொருள்களைப் பற்றி அறிதற்கு அடிப்படையாக நூலறிவு வேண்டப்படும். நூலறிவு மாத்திரம் நூலைச் சொன்னவருடைய அறிவு ஆகுமே யல்லாமல் அதனை ஓதுகிறவர்களது அறிவு ஆகாது. நூலறிவு ஓதுகிறவர்களுடைய அறிவாக ஆதற்கு முதலாவது ஆராய்ச்சி அறிவு வேண்டப்படும். ஆராய்ச்சி அறிவுக்குத் துணையாயுள்ளன இலக்கண நூலும் அளவை நூலும் ஆம். உண்மையை அறிகிறவனுக்கு ஆராய்ச்சி அறிவு மாத்திரம் உண்மை அறிவைக் கொடுத்து விடாது. ஆராய்ச்சி அறிவில் ஐய உணர்வு திரிபு உணர்வுகளாகிய குறைபாடுகள் உள்ளன. ஆராய்ச்சி அறிவானது இந்தக் குறைபாடுகளினின்று முற்றிலும் நீங்கி, துணிந்து தெளிந்து அறிவதாகிய உண்மை அறிவாக ஆதற்கு, ஆராய்கிறவனுடைய உள்ளமானது தன் முனைப்பு (தற்போதம்) நீங்கித் தூய்மையுடையதாய் விளங்கல் வேண்டும். உள்ளந் தூய்மையாதற்குச் சாதனம் வேண்டப்படும். இவ்வாறு தூய்மையான உள்ளத்தில் இறைவனுடைய நிறைவு அறிவு (வியாபக அறிவு) சேர்ந்து விளங்கும். இறைவனுடைய நிறைவு அறிவு ஆராய்வானுடைய தூய அறிவிற் சேர்ந்து அத்துவிதமாய் (இரண்டற) விளங்குதலாலே அவன் அறியும் அறிவே உண்மை அறிவாகும். இந்த உண்மை அறிவு மெய்யுணர்வு என்றும், திருவடி ஞானம் என்றும், பதிஞானம் என்றும் கூறப்படும்.

3. சிவஞான போத நூலானது முதல் ஆறு சூத்திரங்களால் கடவுள், உயிர், உலகம் என்னும் முப்பொருள்கள் உண்மையையும், அவற்றின் இலக்கணத்தையும் கருதல் அளவை (அனுமானப் பிரமாணம்) ஆராய்ச்சி வழியில் உணர்த்தும். இவ்வாறு உணர்த்தப்படுவது போது இலக்கணம் அல்லது தடத்த இலக்கணம் ஆகும். பின் ஆறு சூத்திரங்களும் தூய உள்ளமுடைய ஒருவர் தம்முள்ளே உணரும் உணர்வு வழியில் முப்பொருள்களின் உண்மை இலக்கணத்தை உணர்த்தும். இந்த உண்மை இலக்கணம் (சொரூப இலக்கண மென்றும் கூறப்படும். உண்மை இலக்கணம் உள்ளுணர்வில் உணர்தற்கு இலக்கண நூலும் அளவை நூலும் வேண்டப் படா. வேண்டப்படுவன, ஒருவன் தானே செய்யும் சாதனங்களாகும். அச் சாதனங்கள் இவை என்பதும் அச்சாதனங்களால் அடையும் பயன்கள் இவை என்பதும், அப்பயனை அடைந்தோர் தன்மைகள் இவை என்பதும் பின் ஆறு சூத்திரங்களிற் கூறப்படும்.

4. ஒவ்வொரு சூத்திரமும் இரண்டு முதல் ஏழு அதிகரணங்களை உடையது. அதிகரணம் என்பது கூறு. ஒவ்வொரு சூத்திரத்திலுள்ள அதிகரணங்களும் ஒன்றுக் கொன்று ஏதுவும் பயனுமாய்ச் சங்கிலித் தொடர்போல் ஒரு பொருள் மேல் வருவன. ஒவ்வொரு அதிகரணத்துள்ளும் ஐந்து உறுப்புகள் அமைந்துள்ளன. அவை 1 மேற்கோள், 2 ஐயப்பாடு, 3 பிறர் கூறும் பக்கம், 4 பிறர்பக்கத்தை மறுத்துரைக்கும் சித்தாந்தம், 5 இயைபு என்பன. மேற்கோள் என்பது அதிகரணத்தில் எடுத்துக் கூறப்படும் பொருள். ஐயப்பாடு என்பது அப்படி எடுத்துக் கூறப்படும் பொருள் உண்டோ இல்லையோ என்று மனதில் எழும் ஐயம் (சந்தேகம்), பிறர் கூறும் பக்கம் என்பது சித்தாந்த வாதி அல்லாத பிறவாதிகள் கூறும் கருத்து. பிறர் பக்கத்தை மறுத்துரைக்கும் சித்தாந்தம் என்பது அப்படிப் பிறவாதிகள் கூறுங்கருத்தை ஏதுக்களுடன் மறுத்து உரைத்துச் சித்தாந்தத் துணிவை நிலை நாட்டுதல். இயைபு என்பது அந்தச் சித்தாந்தத் துணிவுக்கு எடுத்துக் காட்டும் திருட்டாந்தம்.

5. ஒவ்வொரு சூத்திரம் ஒவ்வொரு பகுதியாகவும் சூத்திரத்திலுள்ள அதிகரணம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உட்பகுதியாகவும் வைத்துச் சிவஞான போதக் கருத்துக் கூறப்படும்.

முதலாவது பகுதி

கடவுள் உண்மை

வேதங்களும் ஆகமங்களும், முறையே கடவுளது பொது இலக்கணத்தையும், சிறப்பு இலக்கணத்தையும் கூறுகின்றனவாகத் திருமூலர் முதலிய அருட் பெருமை வாய்ந்த பெரியோர் கூறுகின்றார்கள். பலவகைத் தகுதி மக்களுக்குப் பலபட விரித்துக்கூறும், அவற்றின் ஒருமைக் கருத்தை யுணர்த்த எழுந்தது சிவஞானபோதம். அவைகளின் பகுதிகளையாவது வேறு அருள் நூல்களையாவது கற்றுக் கேட்ட ஒருவனுக்குத் தனது உள்ளத்தில் கடவுள் உண்டோ இல்லையோ என்ற ஐயம் நிகழுமன்றோ ? அந்த ஐயத்தை நீக்குதற்கு எழுந்தது முதலாவது சூத்திரம். இந்த ஐயத்தை நீக்கும் அறிவுக்குக் கருவியாயுதவுவது கருதல் அளவை (அனுமானப்பிரமாணம்). கருதல் அளவையாவது ஒருவன் தன் வீட்டு அடுக்களையில் எரியும் நெருப்புடன் புகையும் எப்பொழுதும் உடன் இருப்பதாகக் கண்ட பழக்க அறிவை (அநுபவ அறிவை)த் துணையாகக் கொண்டு தூரத்திலுள்ள ஒரு மலையிலிருந்து புகை வருதலைக் கண்டு அதில் நெருப்பைக் காணவிட்டாலும் நெருப்பு உள்ளது என்று கருதல். இந்தக் கருதல் அளவைச் சான்று (inferential evidence) அறிவுடைமக்கட் சட்டங்களில் உண்டு. கருதல் அளவை அறிவுக்கு உள்ளத்தில் ஒருமையுடன் ஊன்றி நினைத்தல் (சிந்தித்தல்) வேண்டும். அருள் நூல்களைக் கற்றுக் கேட்டு அறிந்த உரை அளவை அறிவுடன் இந்தக் கருதல் அளவை அறியவும் சேர்ந்து ஒருவனுடைய உள்ளத்தில் கடவுள் உண்டென்னும் உண்மை உறுதிப்பாடு அடைகிறது. மலையிற் காணப்படும் புகை போல உலகில் ஒருவன் கண்ணுக்குக் காணப்படும் பொருள்களெல்லாம் ஆண் உயிர் உடல்களும், பெண் உயிர்

உடல்களும் ஆண் என்றும் பெண் என்றும் பகுத்தறியப் படாத உயிர் உடல்களும் உயிரில்லாத பொருள்களும் ஆகும். இந்த உயிர்ப் பொருள்களும் உயிரில்லாத பொருள்களுமே உலகம் ஆகும். உயிர்ப் பொருள்கள் தனித்தனியாய் ஒரு காலத்தில் பிறத்தலையும், சிலகாலம் இருத்தலையும், பின் அழிதலையும் நாம் பார்க்கிறோம். உலகம் முழுமையும் இருத்தலை மாத்திரம் நாம் பார்க்கிறோம். உலகம் முழுமையும் ஒரு காலத்தில் உண்டாதலையும், மற்றொரு காலத்தில் அழிதலையும் சிறுவாழ் நாளுடைய நாம் பார்த்தல் முடியாது. உலகத்தின் இருப்பு நிலையிலிருந்து அது முன் ஒரு காலத்தில் தோன்றி இருத்தல் வேண்டும் என்ற அதன் தோற்ற நிலையையும் பின் அது ஒரு காலத்தில் அழியும் என்ற அதன் அழிவு நிலையையும் நாம் கருதி அறியலாம்.

(2) ஈசல் முதலிய சிற்றுயிர்கள் எல்லாம் மொத்தமாக ஒரு நாளில் அல்லது ஒரு நேரத்தில் உண்டாதலையும், மற்றொரு நாளில் அல்லது மற்றொரு நேரத்தில் அழிதலையும் நாம் பார்க்கிறோம். வேம்பு முதலிய சில மரங்களின் இலைகள் வேனிற் காலத்தில் மொத்தமாய் உதிர்ந்து வீழ்தலையும், மழைக் காலத்தில் தளிர்த்து உண்டாதலையும் நாம் பார்க்கிறோம். இவைகள் போன்ற இயற்கை நிகழ்ச்சிகளிலிருந்து நமது பார்வையை நீட்டி உலகம் ஒரு காலத்தில் தோன்றுதலும், நீண்ட காலம் கழிந்து மற்றொரு காலத்தில் அழிதலும் உண்டு என்று நாம் அறிந்து கொள்ளலாம். இன்னும் மாயா காரிய உலகம் நமது ஊனக் கண்ணாற் கண்டு சுட்டி அறியப்படுவதாயும் பல்வேறு வகைத்தாய்ச் சடமாயு மிருத்தலால் அத்தன்மைகளை உடைய பொருள்கள் அழிய நாம் நமது அநுபவ அறிவிற் காணுதல் போல் உலகத்தையும் அழிதலுடையது என அறியலாம். தற்காலம் மேற்கு நாட்டு இயற்கை ஆராய்ச்சி யாளர்களும் பகலோனுடைய ஒளி குறைந்து வருதலைக் காரணமாகக் கொண்டு இந்த உலகமும் நீண்ட காலங்கழிந்தபின் அழிதல் கூடும் என்று கருதுகிறார்கள். ஆகவே, இந்த உலகமானது தோற்றம், இருப்பு, அழிதல் என்னும் மூன்று தொழில்களையும் உடையது என, நாம் அறிகிறோம்.

(3) முன்னே கூறியபடி உலகம் தோன்றுதலையும் அழிதலையும் நாம் பார்க்க முடியாவிட்டாலும் உலகத்தின் இருப்பு நிலையை நாம் மொத்தமாகவும், தனிமையாகவும் பார்க்கிறோம். அவ்வாறு பார்க்குங்கால் உலக இயற்கை நிகழ்ச்சிகளெல்லாம் ஒழுங்காயும் விலக்க வொண்ணா நியமம் (inevitable law) உடையனவாயும் முடிவில் ஒரு நற்பயன் உண்டாகும் முறைமையுடையனவாயும் நிகழ்கின்றன. தனிப் பொருள்கள் நாம் வியப்படையும்படி தோன்றுதலையும், இருத்தலையும், அழிதலையும் பார்க்கிறோம். உலக நிகழ்ச்சிகள் இவ்வாறு நிகழ்த்தலிலிருந்து இவைகளை யெல்லாம் இயக்க வல்ல ஒரு முதல்வனாகிய கடவுள் இருத்தல் வேண்டும் என்று நாம் கருதுகிறோம். வீடு போன்ற செயற்கைப் பொருளொன்றிலுள்ள தொழிற்பாட்டின் றிறனை நாம் பார்த்து அதனைக் கட்டினவனை நேரிற் பார்க்காவிட்டாலும் அறிவுடைய ஒருவன் அதனைக் கட்டியிருத்தல் வேண்டும் என்று நாம் கருதி அறிதல் போல உலக நடப்பைப் பார்த்த நாம் அதனைச் செய்யும் ஆற்றலுடைய ஒரு கடவுள் இருத்தல் வேண்டும் என்று நாம் கருதல் அளவை அறிவாக அறிகிறோம். இத்துடன் முதலாவது அதிகாரம் முடிந்தது.

கம்பன் கவிச்சுவை யமைப்பு

[திரு. அ. வரத நஞ்சைய பிள்ளை அவர்கள்]

உயர்தனிச் செம்மொழிகளென ஆன்றோர் விதந்தோதும் மொழிகளுள் நம் நாட்டு மொழியாகிய தமிழ்மொழியும் ஒன்றாம். வடமொழி, ஆங்கிலம் முதலிய மொழிகளில் மிகச் சிறந்த காப்பிய நலங்கனிந்த சொற்சுவை பொருட்சுவைகள் துளும்பும் பற்பல நூல்களிருத்தல்போலவே நம் தென்மொழியிலும் பலப்பல நூற்களுள்ளன. காளிதாசன், பர்த்தருகரி, ஷேக்ஸ்பியர், மில்டன், கார்லைல், ஸாக்ரடீஸ், போன்றோர், எங்கள் மொழியினைப் புனைதற்கென்றே தோன்றிய "அரும்பெறற்புலவர் மணிகள்" என்போர்க்கெதிராய், நாணாது தலைநிமிர்ந்து அஃதே

போல எங்கள் தொன்மொழியாம் தமிழ்மொழியையும் அணியுறுத்தி உயர்வு பெறுதற்குத் திருவள்ளுவனார், கம்பர், சீத்தலைச் சாத்தர், இளங்கோவடிகள், சேக்கிழார், கச்சியப்ப சிவாச்சாரியார், சிவஞானமுனிவர், கச்சியப்பசுவாமிகள், சிவப்பிரகாசர், குமரகுருபரர், நணுகிய காலத்தே மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் போன்ற தெய்வப்புலமைச் சீரியல்வாய்ந்தோராய்க் கருவிலே திருவுடையராய்ப் பற்பல மேலோர் தோன்றியுள்ளாரென நாமும்கூறி இறுமாத்தற்குரியேம். நம் நாடு வளங்குறைந்து வறுமைமிக்குறினும் நமது மொழி வளம் ஏனைமொழிகளுக்கிணையாகவோ அல்லது ஒரு படி அதிகமாகவோ நின்று விளங்குவதேயன்றி அவற்றிற்குத் தலை தாழ்த்துக்குறையும் நிலையில் என்றுமிராது. நூலின் சுவைகளையே ஆராய்ந்து மகிழும் கல்வி விநோதர்கள் இம்மொழியின் சுவையைச் சற்று நுகரும் பேறு பெறுவாராயின் வேறெம்மொழிகளையும் வெறுக்கப்புகுவரென்பது முற்றும் உண்மையே. ஆங்கில நாட்டிற்பிறந்து அம்மொழிப்பாலையே பருகி வளர்ந்த மேதாவியார் ஒருவர் (ஜி. யு. போப்) தம் கல்லறையின்மேல் தம்மை "ஒரு தமிழ் மாணவகன்" எனப் பொறித்துக் கல் நடுமாறு கூறியிறந்தனரெனின், நம்மொழியின் பெறுமைக்கு வேறு சான்றுகள் கூறவேண்டா. உலக நூற்களாகிய உடல்நூல், இயற்கைநூல், வானநூல், உலோகநூல் முதலவாய் ஆங்கில மொழியில் பெருக்கப்பட்டுள்ள கலைகள் நம்மொழியில் இல்லையென்னும் குறையை நாம் தலைநாணி ஏற்கவேண்டியதே ஈங்கு அவற்றைவிட்டுக் கற்போர்மனதைக் கவர்ந்து அடிக்கடி உவகைக்கடலினுள்ளும் வீரச்சுவைக்குள்ளும் ஏனைப் பல சுவைக்குள்ளும் புகுத்துப் புகுத்து ஈர்த்துச்செல்லும் கதைமொழி பாட்டுகளைப்பற்றியே எடுத்துக்கொண்டோம்; ஆதலின் அவையிற்றையே பற்றிப் பேசுவோம்.

யாம் மேலே காட்டியவாறு செந்தமிழ் மடந்தை செய்தவப்பேற்றால் வந்தவதரித்த மதிநுட்பம் நூலோடுடைய புலவர் பெருமக்கள் பலரெனினும், 'கம்பர்' என்பார் ஒருவரையே "கல்வியில் பெரியன் கம்பன்" என்றும், இதுவென்ன கம்ப

சூத்திரமா? என்றும் எடுத்துக் குறித்தோதப்படுதலால், அவர் இயற்றிய 'இராமாவதாரம்' என்னும் நூலிற் காணப்படும் மிக அருமை பெருமை வாய்ந்த சொல்வளம் பொருள் நயங்களைக் கொண்டே அவ்வாறு தமிழுலகம் அவரைப் பாராட்டுவதாயிற் றென உணர்கின்றோம். நம் ஊகை வலியுறும் வண்ணம் அவ் விராமாவதாரச் சிறப்புப் பாயிரத்திலுள்ளதோர் கவியும் துணை செய்கின்றது. அது:—

இம்பர் நாட்டிற் செல்வமெலா மெய்தியரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா வோங்குநீழலிருந்தாலும்
செம்பொன் மேருவனைய புயத்திறல்சேரி ராமன்றிருக்கதையிற்
கம்பநாடன் கவிதையிற்போற் கற்றோர்க்கிதயங் களியாதே.

என்னுஞ்செய்யுளேயாம். இவ்வுலகத்தின் இன்பங்களுட்சிற ந்த இன்பம் யாதாகலாம்? கருதிய கருதியவாறே கைக்கூட் டற்கேற்ற பெருஞ்செல்வம் மிகப்பெற்று, உலகமுற்றும் ஒரு தானே அரசாளும் பேறுவாய்ப்ப இருத்தலன்றி வேறென்? இந்நிலைமையை அடையினும், அன்றி மறுமை யுலகின் இன்பம் யாதாக இருக்கும்? அமுதமுண்டு இறவாது வானநாட்டரம் பையர் சூழக்குலவிப் பிறிதொன்றும் வேண்டாப் பெற்றியின் மகிழ்ந்திருப்பதாகலாம், இவ்விரண்டும் ஒருசேர எய்தி நுகர்ந்து பெறும் இன்பம் அனைத்தும், கம்பன் இயற்றிய இராமகதையின் ஒரு செய்யுளைக்கற்று அடையும் இன்பத்தைப்போல் சிறந்த இன்பம் அளிக்கமாட்டா எனக் காட்டப்பட்டது.

அட! ஈதென்ன! வாய்மைதானோ? ஒரு கவிஞனைப்பொய் யுரை கூறிப் புனையும் புலவர் வழக்கத்தின்பாற்பட்டதோ? என் றையுறவேண்டா. உண்மையே என அந்நூலிற் பல்கால் அழு ந்தி ஓதி ஓதி யுணர்ந்து சுவைகண்டார் மொழிதற்குரியர். அத் துணை மகிழ்ச்சி மலிந்த களஞ்சியமாய் நின்று நிலவக் கம்பர் இயற்றியுள்ளார். தாமின்புறுவது உலகின்புறக்காணல்' கற்ற றிந்தார்க் கடனாதலின் யான் தமிழ்க்கல்வியிற் சிறிது கற்ற துணைக்கேற்பப் புல்லியவறிவு அவ்வரும்பொருட்களைப் புல்லிய வளவு நம் செல்விக்குரைப்பத் துணிகின்றேன். சுவை நிரம்பிய

மிகப்பரந்த பாற்கடலினுள் ஓர் திவலையை மேல் எழுப்பி அதனைப்பல அணுக்களாய்ப் பகுத்து ஓரணுவைத்தெறித்து இவ்வாறே இக்கடலின் நீர் அத்தனையும் சுவைமிகவுடைத்தெனத் தெரிக்கப்புக்காற்போல ஆங்காங்கே நமது புலவர்பெருமான் காட்டிச் செல்லும் அருமை பெருமை மிக்க கவிச்சுவைகளையும் அவற்றை அவ்வண்ணம் அமைத்த நுண்ணிய கூறிய மதித்திறனையும் சொற்றிறத்தையும் மாதிரிக்காகக் காட்டலுற்றுக் குற்றம் நீக்கிக் குணங்கொள்ளத் தமிழ்வல்லோரை வேண்டுகின்றேன்.

கம்பர் ஓர் இயற்கை நிகழ்ச்சியைப் புனைந்துகூறி முடித்தற்கும் பிறகவிகள் அங்ஙனம் முடிப்பதற்கும் வேறுபாடுண்டு. சிற்சில வகையாய்ப்புனைந்து கூறிக்கொண்டேபோய் அதனை முடிக்குமிடத்தே கற்போர் உள்ளம் துள்ளிக்குதித்துக் களிபேறுவகைபூத்து நகைமுகம் தோன்ற மிக வியப்புடைய தொன்றைக் கூறிமுடிப்பது இவர்கொண்ட கோட்பாடு. இவ்வாறு பிற புலவர்கள் சென்றிலர். அவற்றுள் சில காட்டுவாம்.

இராவணன் சூர்ப்பநகையால் சீதையின் பேரழகைக் கேட்டுக் காமமிக்குடையனாய் ஆற்றாது வெம்பி அவ்வெப்பம் தீர்த்தற்குப் பகற்காலத்தேயே இரவியைப்போக்கி மதியைத் தருவிக்க மொழிந்தனன். மதியமும் எஞ்சி நின்ற பகல் முற்றுமுன்னே அவன் கட்டளைப்படி வானகத்தேகலை வீசித்தோன்ற, முன்னையினும் காமநோய் முதிர்ந்து கனற்ற அவ்விராக்காலத்தையும் வெறுத்து உடனே பழையபடி பகற்காலமே யாகுக. கதிரவனை வருவியுங்கள் என்று ஏவலர்க்குப் பணிப்ப நள்ளிரவு திடீரெனமாறிக் காலையாயிற்று. இவ்வாறு இராவந்து உரிய நாழிகை கழியுமுன்பே விடிந்து பகலாமென்பது தெரியாதாகலின் யாவருமே அப்புதுப்பகலில் தூங்கிக் கிடந்தனர் என்று கூறிவரும் இடத்தில் "மங்கையர் துணைவரைத் தழுவினர் துயில்கின்றார் சிலர். யாவர் கண்களும் பகல் வந்தும் திறவாமல் மூடப்பட்டிருத்தல், உலோபிகள் பகல் முழுதும் தங்கள் மனைக்குப் பிச்சை கேட்க இரவலர் யாரேனும் வந்துவிடுவரே என்ற அச்சத்தால் வாயிற்கதவை மூடிவைப்பது

போலக் காணப்பட்டது. பகற் காலத்தே மலர்தற்குரிய பல மலர்களும் மலர்தலொழிந்தன. எனக் கூறிவந்து முடிக்கும் இடத்தில்,

“ ஏவலின் வன்மையை யெண்ணவேற்றலர்
நாவலரி யற்றிய நாளினும நூற்
காவலி னினிதுணர் கணிதமாக்களுங்
கூவுறு கோழியுந் துயில்வு கொண்டவே. (ஆர. மாரீ. 129.)

எனக்கூறி நிறுத்துகின்றார். இவ்வாறு ஓர் இரா இடையே பகலாகுமென்பது தெரியாமல் மக்களும் பிறவும் உறங்கலாம்; இதிலென்ன வியப்பு! ஒவ்வொரு பகலும் இரவும் இத்தனை நாழிகை யுடையன. இன்று இந்நேரத்துக்கு மதியம் உதிக்கும், இன்னமீன் உச்சமுற்றால் நாழிகை யிவ்வளவாம். என வான நூற்கணிதம் தேர்ந்தோதும் காலக்கணிதரும் அன்று அயர்ந்து தூங்கிவிட்டனர், இதுவும் ஓர் வியப்பாகாது. அவர்கள் தாம் இராவணன் இவ்வாறு மாற்றுவா னென்பதை எங்ஙன மறிவார்கள்? இவை யெலாம் ஒழிக. இயற்கையாகவே கடவுள் படைப்பின் முறை பிறழாது விடியற்காலத்தை அறிந்து நமக்குணர்த்தும் தொழிலைக் குலத்தொழிலாகக் கொண்டு மாறாது கூவிவரும் கோழிச் சேவல்களும் அன்று கண்ணுறங்கினவே” என்று கூறுகின்றார். ஆ! கவிஞர் பெருமான் சமயத்திற் புகன்ற அருமைச் சொற்றிறம் கண்டீர்களா? இயற்கைப் பொருட்கள் தம் இயல்பு மாறுதென்னும் தன்மையை உள்ளங் கொண்டு உரிய இடத்தோதிய அவர் தம் நுண்மதிக்கு நம்முள் ளம் திறைகொடுக்க வேண்டாவோ.

இதே வண்ணம் மற்றோரிடத்தே இப்பொருளையே பிறிதோரியற்கையால் வியப்புறக் காட்டியிருக்கின்றார். அதாவது:—

இராமன் ஆணைப்படிச் சீதையைத் தேடிக்கொண்டு இலங்கைக்குட் புகுந்த அநுமான் ஆங்காங்கே சுற்றித் திரியும் நள்ளிரவின் நிகழ்ச்சிகளைக் கூறிய இடத்தில் யாவரும் உறங்குகின்றனர். காரிய மடங்கினர்கள் கம்மியர், ஊர்காவலர் துடிக்கண் ஒலித்தன. ஆடவரோடுடிய பெண்கள் ஒழியப் புணர்ந்த மட

வார் துயின்றனர். என்று இவ்வாறு கூறிக் கொண்டே வந்து நிறுத்தும் தறுவாயில்,

'நித்த நியமத்தொழி லராய் நிறையும் ஞானத்
துத்தம ருறங்கினர்கள் யோகியர் துயின்றார்
மத்தமத வெங்களி றுறங்கின மயங்கும்
பித்தரு முறங்கின ரினிப்பிறரி தென்னும்.(சுந். ஊர்தே. 165)

ஞானிகளும் யோகிகளும் விழித்துக் குறி நோக்கற் கமைதி யுடையதென்று கொள்ளாமல் அவ்விரவில் உறங்கினர். மதங் கொண்ட யானைகளுமே அன்று அயர்ந்து தூங்கின. இவை எல் லாம் வியப்பல்ல; இரவில் தூக்கமே பிடியாத இயற்கை பெற்ற பித்துக் கொண்டவர்களும் நன்றாய்த் தூங்கிவிட்டனர் என்கின் றார். மூளை கெட்டுத் திரியும் பித்தர்களுக்கு இரவில் தூக்கமே வருவதில்லை யென்னும் இயற்கை இவர் நன்கு தெரிந்து அத னைத் தக்கதோரிடத்தில் காட்டும் ஞாபகத்தை என்னென்று பாராட்டுவோம்.

இங்ஙனம் வருணனையில் மட்டுமல்ல. ஒருவரோடொருவர் பேசிக் கொள்வதாகக் கதையில் வருமிடங்களிற்கூட அப்பேச்சு இத்துடன் நிறுத்தப்படுமெனக் கற்போர் அக்கவி கொண்டே உணர்ந்து கொள்ளும் முறையில் அச்சொல்லை வெல்லுஞ் சொல் வேறில்லை யெனும்படி ஓர் சொல்லைக் கூறி முடிப்பர்.

இராமபிரானை வனம்புக அரசன் ஆணையிட்டாரெனக் கேட்டு மிகப் பதைபதைத்துச் சீறிக் கனலெழ விழித்துப் போர்க் கோலத்தோடு யானே இராமனை முடி புனைவிப்பேன் தடுக்குநர் தடுக்க வம்மின் பார்ப்போம் என நிற்பதைக் கண் ணுற்று இராமன் இலக்குவ! என் இத்தனை சீற்றம் உனக்கு? என, அவன், ஐய! நினக்கு இவ்வுலகம் முடி சூட்டுவதாய் முற் கூறிப் பின் நேர்ந்த மாறுபாட்டால் நீர் இப்போது வனம்புக நேர்ந்த தென்றால் யான் இச்சமயத்தன்றி வேறெச்சமயத்தில் கோபம் கொள்ளவுரியேன். உன்பால் அன்பில்லாதார் உன்னை வனம் புகுத்த இப்புல்லிய உடற்சுமையைச் சுமந்து யான் உயிர் தரிப்பேனோ? என் கண்முன்னே இவ்வுலகம் ஆளும் அரசுரிமை

நினக்கென்று சொல்லி அவ்வார்த்தை தவறி இப்போது உனக்கில்லை அரசென்று செப்பிய அரசனே டொத்த வன்கண்மையேனேயான் என மொழிதலும், சீதை கொண்கன், ஓர் யாற்றில் வெள்ளம் பெருகாக்குறை மழை யின்மையாலன்றி ஆற்றின் குற்றமாகுமோ, அதுபோல என்பால் நல்லூழ் இல்லாமையாலே இங்ஙனம் நிகழ்ந்தது, சினந்தவிர்கவென்று செப்ப, இளையவன் உனக்கரசில்லை யென்று செய்த அவ்விதியே, ஆம் ஆம் இராமனுக்கே அரசு என்று சற்று நேரத்தில் உடன்பட்டு வேறு விதியாக மாற்றுகிறேன் என் வில்லால் பார் என விளம்ப, இராகவன் தாய் தந்தையர் மேற் சலிப்புறுதல் மக்கள் கடமை யாகாதென மறுக்க, தம்பி, நீயே என் தந்தை, நீயே என் அன்னையும், நீயே என்னரசனும், நினக்கு இடையூறு காணக்கணமும் பொறேன் என்று கைமறித்துக் கழற, ஐயன், அங்ஙனமாயின் அருமைத் தம்பியைக் கொலை செய்தோ தந்தையை வதைத்தோ தாயைத் தலை துமித்தோ உன்கோபந் தீர்த்து யான் பட்டம் புனையப் பெறுவதெனப் பேச, பின்னவன் பகைவர் சொல்லும் பழிச் சொல்லும் தோளென்று கூறும் கல்லும் அதனில் ஒரு வில்லும் சுமத்தற்குப் பிறந்த யான் கோபம் கொண்டென்செய்வேன் எனக் கண்ணீருகுக்க,

இராமன் என் தந்தை சொற்றவழி யான் அரசு புரிய உடன்படேன். என் சொல்லை நீ கேட்க வேண்டுமென்பதென்ன ? என்று ஒரு சொற் கூறவே, இராமனை உண்மையிலேயே தந்தையாகக் கருதியொழுகும் இலக்குவன், (இராமன் தந்தை சொல்லை மேற்கொண்டாற் போல நானும் என்னையன் சொற் கடப்பது தவறு) அவன் விரும்பியவாறே ஒழுகுவேன் எனச் சினந்தணிந்தனன். என இவ்வாறு நீண்டு வந்த வினாவிடைகள் முடிவதற்கு ஏற்ற ஓர் வெற்றிச் சொல்லைத் தந்து முடித்த இவர் நாவன்மை மிகப்பாராட்டற் பாலதே.

இவ்வண்ணமே பல இடங்களிலும் முடிவிடம் மிகத்தரமான உயரிய கருத்துக்களோடு முடிக்கப்படுவன காண்க. விரிப்பிற் பெருகும்.

இனி நம் கவியரசர், சில அடை மொழிகளைக் கூறுவதி னின்று அப்பொருளுக்கு அமைந்த சிறந்த கருத்துக்கள் உத்தி வகையால் உணர்ந்து கொள்ளுமாறு குறிப்பித்துச் செல்லும் இயல்பினர், என்பதற்குச் சில மேற்கோள் காட்டுவாம். இவ் வாறு அடைமொழிகள் வேறு பிற புலவர்களால் சிறந்த பொரு ளைக் குறித்துணருமாறு அமைக்கப்பட்டில. இருப்பினும் வெகு அருமையாயிருக்கும்.

இராமபிரான் திருமணத்தின் பொருட்டுச் செல்லுந் தயரத னது படையாளர்கள் வழியில் அயர்வுதீரத் தங்கி ஆடவரும் மனை வியருமாகப் பூக்கொய்து விளையாடுகின்றனரெனவரும் இடத்தில்,

போரென்னவீங்கும் பொருப்பன்ன பொலங்கொடிண்டோள்
மாரன்னனையான் மலர்கொய்திருந் தானைவந்தோர்
காரன்ன கூந்தற் குயிலன்னவள் கண்புதைப்ப
யாரென்னலோடும் அனலென்ன வயிர்த்துயிர்த்தாள்.

எனமொழிந்தனர். ஒரு ஆடவன் 'காமன்போன்ற கட்டழகி னன்' எங்கேனும் 'போர்' என்னும் சொற்கேட்பில் உடனே மலைபோலப் பூரிக்கும் தோளாற்றலுமுடையன். தன் மனைவி குழலில் தொடுத்துத் தானே யணிந்து மகிழக்கருதி அங்கும் இங்கும் ஓடிப்பற்பல நன்னிற நறுமலர் பறித்துக்கொண்டிருப் பத் தன்நாயகன் தன்னை அலங்கரித்தற்கு வருந்துகின்றமை நோக்கி அதற்கினிய கைம்மாறாகத் தானொன்று செய்யக்கரு திய அவன் மனைவி பின்புறத்தே சென்று அவனிருவிழிகளையும் தன் கைகளாற் புதைத்தலும் அவ்வாடவன் 'யார்?' என ஒரு சொற்கூறினனாக, அதற்கே நெருப்புப்பொறி பறக்கச் சிறந்து நெட்டுயிர்த்து அம்மங்கை தூரவிலகி அகன்றனள்: என்பதன் கருத்து. பின்புறம் மறைந்து வந்து கண் பொத்துதல் உவகை விளைக்கும் விளையாட்டு. அங்ஙனம் கண் புதைப்போர் குரல் காட்டாமல் வருதல் இயல்பு. இம்மாதும் உரையாது பைய வந்து கண்புதைத்தாள் எனக் கவிகூறாமல் 'காரன்ன கூந்தற் குயிலன்னவள்' என்றே குறித்தார். மேகம்போன்ற கூந்தலை யும் குயில்போன்ற மொழியினையும் உடையாள் என அவளியல்

யை அணிந்து கூறியதெனப் பொருள்கொள்வதனோ டமையா மல் காரும், குயிலும் நினைப்பூட்டப்பட்டமைகொண்டு கார்ப்ப ருவத்தே குயில் கூவாது வாயடங்கும் இயற்கை உணரப்பட்டு அவ்வாறே இவளும் ஓசைப்படாது வந்தனள் என உய்த்துணர வைத்த திறமை மெச்சும் தகையது.

இங்ஙனமே இராவணன் இராமனது போர்முகத்தில் தோல் வியுற்றுப் படைகளும் படைக்கலமும் ஏறிவந்த தேரும் முற்று மொழியக் கால்நடையாய்ச் செல்லும்போது அவனுள்ளக்கிடக் கையைக் கூறநேர்ந்த இடத்தே,

"வானகமண்ணுமெல்லா நகுநெடுவயிரத்தோளான்
நானகும்பகைவரெல்லாம் நகுவரென்றதற்குநாணன்
வேனகுகருங்கட்செவ்வாய் மெல்லியல் மிதிலைவந்த
சானகி நகுவளென்ற நாணத்தாற் சாம்புகின்றான்." என்றனர்.

(இ-ள்.) மிகவெற்றிபெற்று எட்டுத்திக்கிலும் புகழ்வி ளைத்து வானையும் மண்ணையும் தமக்கடிமையாக்கி ஆளும் அவ் விராவணன் இதன்முன் தான் பொருதுமெல்ல ஆற்றாராய் முது கிட்டோடில் பகைவர்களை நோக்கிச் சிரித்த நகைப்பை இப் போதுதன் நிலைமையைக்கண்டால் அவர்களும் திருப்பிச் சிரித் துப் பழிவாங்குவார்களே என்று வெட்கங்கொண்டானோ எனின்? இல்லை ! இல்லை !! அவன் கொண்ட வெட்கம் வேறொன்று பற்றி. அது, வேல்போன்ற கரிய கண்களையும், சிவந்த வாயையுமுடைய சானகி கண்டு சிரிப்பாளே என்பதுகொண்டு. அந்நாணமே அவ னுள்ளத்தை மிகவும் வாட்டுகின்றது. (என்பதாம்.)

இதனுள், இந்நிலைமையில் சீதை தன் ஆண்மையை மதித் தாலன்றி இணங்காளென்பதொன்றினையே கருதுதலுடையானா தலின் தன் ஆற்றலின்மையுடன் தன் நாயகனாகிய இராமனது பெருகிய பேராற்றலையும் அவள் கண்டு பின்னும் தன் கணவ னையே மதிப்பதன்றி என்னை மதியாளே முன்னையினும் அதிக மாய் எள்ளி நகையாடுவாளே. என் எண்ணம் எவ்வாறு நிறை வுறும் என்றே நினைக்கின்றேனாதலின் அவ்வொரு நாணமே அவனை வாட்டலாயிற்று. எனக்கருத்துற மொழிந்தவர் சீதை

யின் ஏனை உறுப்புக்களில் எவற்றையேனும் புனைந்துரையாது கண்களையும் வாயையுமே சுட்டிக் கூறுவானேன் என ஊன்றி நோக்குவோமாயின் அஃதொரு சிறந்த கருத்தைக் குறிக்கும். தன் தோல்வியைச் சீதை முதலிற் கண்ணுற்றுப்பின் சிறப்ப ளென உட்கொண்டான் இராவணன். ஆகவே காணுங்கண் எத்தகைய வனப்பிற்று எனக் கருத நேர்ந்த வழி வேனகு கருங் கண் என அது முற்படக்குறிக்கப்பட்டது. பின் நகை தோன்றுமிடமாகிய வாயின் நினைவால் அது செவ்வாய் என ஓதநேர்ந்தது. தனது வன்மைத் தன்மைச் சிறப்புத்தீர ஓர் மெல்லியலாள் நகைப்படுவேனே எனக் கருத்தோடிற்றாகவே மெல்லியல் என்றும் கூறலாயிற்று என இவ்வாறு கதாபத்தி ரங்களின் சொந்தக் கருத்தின் வழி தனது கருத்தைச் செலுத்தி அம்மயமாக நின்று கூற்றுரைக்கும் வன்மை இக்கவிஞர்பால் மிக்குள்ளதென்க. (தொடரும்)

குன்றத்தூர் சேக்கிழார் திருவவதாரஞ் செய்த இல்லம்

சாத்தூர் வழக்கறிஞர்,
[திருவாளர் டி. எஸ். கந்தசாமி முதலியார் B. A. எழுதுவது.]

பரந்த இந்நில உலகத்தில் எண்ணில் கோடிமக்கள் அறி வின்மையாம் பேரிருளில் மூடப்பட்டுச் சோம்பி வாளா இருந்த பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் புலத்துறை முற்றிய ஆட வரும் மகளிரும் செந்தமிழ் நாட்டிற் பல்வேறு இடங்களில் விசும் பில் தோன்றும் உடுக்களும் திங்களும் போல் தத்தம் அறிவுச் சுடராம் பேரொளியைத் தம் நாடெங்கணும் பரப்பி வந்தனர். அப்புலத்துறை முற்றிய புலவர்கள் எந்நாட்டிற்றோன்றினும் அந்நாட்டிற்கு எல்லை இல்லாப் பெரும்புகழ் உண்டாம் என் பதில் சிறிதும் ஐயம் இன்று. செந்தமிழ் நாடெனச் சேர சோழ

பாண்டிய நாடுகளையே சிறப்பாக ஆன்றோர் கூறி இருப்பினும் தமிழ்கூறும் நல்லுலகத்தில் தொண்டைநாடும் முனைப்பாடி நாடும் அடங்குமென்னலாம். கைம்மாறு கருதாது உலகத்தார்க்கு ஒளி நல்கும் உடுக்களும் வெண்டிங்களும் கவிஞர் பெருமக்களால் போற்றப்படுகின்றன. அவ்வுடுக்கள் கைம்மாறு ஒன்றுங் கருதாது ஒளி நல்குமாயினும் அவற்றின் ஒளியின் அழகினைக் கண்ட கவிஞர்கள். வேறு பொருட்பயன் ஒன்றுங்கருதாது அவற்றின் அழகினைப் புகழ்வர். நல்லிசைப் புலவர்கள் வேறு பயனொன்றுங் கருதாது தம் கருத்தில் எழுந்த அழகிய பொருள்களைச் செவ்விய தீஞ்சொற்களால் கவி புனைந்து தாம் மகிழ்ந்து இன்புறுவதோடு பிறரையும் இன்புறுத்தக் காமுறுவர். அத்தகைய நல்லிசைப் புலவர்களையும் அவர் பிறந்தருளப் பேரருள் பெற்ற ஊரையும் அவர் பாடியருளிய நூல்களையும் அறிவுடைய நன்மக்களெல்லாம் போற்றுதல் வேண்டும். அவ்வாறு போற்ற வேண்டியது அறிவுடையார்களின் கடமையும் ஆகும். இறவாத நூல்களை உலகத்திற்கு இயற்றிக் கொடுத்த இயற்றமிழ்ப் புலவர்களுக்கு நம்மாற் செய்யலாகும் கைம்மாறு என்ன இருக்கிறது! அந்நூல்களுள் நுவலப்படும் பொருட்செல்வத்தின் பயனைப் படிப்போர் அநுபவித்து அதனோடு அமையாது பலருக்கும் அது செல்வத்தை வழங்குதல் வேண்டும் என்றும் இறவா நூல்களைப் படைத்த அப்பெரியோர்கள் தாம் கூறிய நூல்களுள் என்றும் இறவாதிருப்பரேனும் இந்நூல்களைக் கற்று மகிழ்ந்த அறிஞர்கள் தவிராது செய்யவேண்டிய கடப்பாடுகள் சில உண்டு. அக்கடப்பாடுகள் யாவையோ எனின் அவர் செய்த நூலினை எவரும் எளிதில் வாங்கிக்கற்று இன்பம் அநுபவிக்குமாறு எங்கணும் வெளிப்படுத்துதலும், அவர் பிறந்தருளிய ஊரில் அவரது நினைவை ஊட்டும் அடையாளங்களாகக் கோவில்கள் முதலிய கட்டடங்கள் கட்டித் திருஉருவம் செய்தமைத்தலும் அவர் பிறந்த ஊருக்கு அறிஞர்கள் சென்று ஒருங்கு கூடி அப்பெரியார் நினைவை ஊட்டும் விழாக்கள் முதலியவைகள் எடுத்தலுமாகும்.

ஆங்கில நாட்டில் தோன்றி ஜெகப்பிரியர் என்னும் நாடகக் கவியை ஆங்கில நாட்டார் யாவரும் ஒரு தலையாய்ப் பொன்னே போன்று போற்றுவதோடு அவர் பிறந்தருளிய ஊராகிய ஸ்ட்ராட் போர்ட் ஆன் அவான் (Stratford-on-avon) என்னும் ஊருக்குத் திரள் திரளாகச் சென்று கண்டு உவகை கொள்ளுகிறார்கள். அந்நாடகப் பேராசிரியரின் நூல்களைக் கற்று இன்பம் நுகர்ந்த ஆங்கில நன்மக்களுள் அவர் ஊருக்குச் செல்லாதவரேனும் அவரை வணங்காதவரேனுமிலர். அத்தகைய பெரும் புலவர்களோடு தொடர்புடைய சிற்சிறு பொருள்களுக்கும் பெரும்பொருள் கொடுத்து அவைகளை வாங்கி அப்பொருள்களினால் அப்பெரும் புலவர்களின் நினைவைப் பெற்றுப் பெருமகிழ்ச்சி அடைகின்ற மக்கள் பலர். டிக்கன்ஸ் என்ற நவீன ஆசிரியர் போற்றி வளர்த்து வந்த அண்டங்காக்கை ஒன்று லண்டன் மாநகரில் அங்காடித் தெருவில் விலைகூறப்பட்டபோது அவ்வாசிரியர்பால் அன்பும் நன்மதிப்பும் உடைய பலர்கள் கூடி அக்காக்கையை ஒவ்வொருவரும் தாம்தாமே பெறவேண்டுமென்று போட்டி செய்து இறுதியில் ௧௫௰ பவுன் கொடுத்து ஒருவர் பெற்றார். மேல் நாட்டில் இசைவல்லார் ஒருவரது முறிந்த யாழ் ஒன்று விலை கூறப்பட்டதென்றும் அப்போது அவ்விசைப் புலவரின் ஆற்றலில் ஈடுபட்ட சிலர் அவ்வியாழை ஒவ்வொருவரும் தாம் தாமே பெறவேண்டுமென்று முயற்சி செய்து போட்டி போட்டதில் ஆயிரக்கணக்கான தங்க நாணயங்களைக் கொடுத்து அம்முறிந்த யாழை ஒருவர் பெற்றுப் போயினர் என்றும் கூறுப. ஆகவே புலவர்களைப் போற்றும் திறத்திலும் அவர்களுக்குச் செய்யவேண்டிய கடன்களை இறுக்கும் திறத்திலும் மேல் நாட்டார் நம்மிலும் பற்பல மடங்கு அறிவுடையார். பண்டைத்தமிழ் மகன் எக்குற்றம் செய்யினும் செய்வான். ஆனால் ஒருவன் தனக்கு எவ்வகையிலேனும் எவ்வளவாயினும் உதவி செய்திருந்தால் அவனை அவன் தன்னுள்ளத்து ஓயாது வாழ்த்தி அவனுக்கு ஏற்றபெற்றியில் நன்றி செலுத்தும் காலம் எப்போது வாய்க்குமோ என்று காத்திருப்பான். இக்காலத்துத் தமிழ்

மகனோ என்றால் அவ்வுயரிய நிலையினின்றும் நழுவி வீழ்ந்துள்ளான் என்று சொல்லின் அது பொய்யாகாது.

தமிழ் மக்களால் பொன்போலப் போற்றப்படுதற்குரிய புலவர் கூட்டத்துள் சேக்கிழார் ஒருவர். அப்புலவர் பெருமானைத் தமிழ் மக்களும் சிறப்பாகச் சைவ நன்மக்களும், என்றும் இடையறாது உன்னி உன்னி வாழ்த்தி வணங்குதற்குரியர். தெய்வம் பேணும் செந்தமிழ் நாட்டில் தெய்வ வழிபாடு குறைவதையும் தமிழ் வழக்கு வீழ்ந்து அயல்வழக்கு வெல்வதையும் சைவ நன்னெறிக் கொள்கை குன்றுவதையும் கண்டு தமிழ்மக்களை உயரிய நெறிக்கு எங்ஙன மீட்டுவதென்று சிந்தித்து உலகெல்லாம் போற்றி உய்தற்குரிய ஒப்பற்ற காவியச்சுவைகள் பலவும் படைத்துள்ள சீரிய திருத்தொண்டர் புராணத்தைக் கைம்மாறு ஒன்றும் கருதாது உலகினுக்கே அளித்த வள்ளல் சேக்கிழார். அவர் பிறந்தருளிய பேரூர் தொண்டை நாட்டிலே சென்னைக்கு அணித்தாயுள்ள குன்றத்தூர். சைவ சமய ஆச்சாரியர்கள் திருவவதாரம் செய்து தம் செஞ்சொற் றேவாரங்களால் தமிழுலகினைத் திருத்திச் சாக்கிய சமண ஒழுக்கங்களை வழக்கறுத்துச் சிலகாலம் சென்ற பின் பண்டு போல் மீண்டும் இவ்வுலகம் சைவ நன்னெறிக் கொள்கையினின்றும் நழுவத் தலைப்பட்டது. அக்காலத்து மன்னர்களுள் தலைநின்ற அநபாய சோழன் தமிழ் நூற்பரப்பாம் கடலை நிலைகண்டுணர்ந்தானாயினும் சமணர் கொள்கைகளில் தம் மனத்தைச் செலவிட்டிருந்தானென்றும் அறிந்த சேக்கிழார் முனிவர் காவியச்சுவையில் ஈடுபட்ட அக்கவிகை மன்னர்க்கு எல்லையில் இன்பம் சுரக்கும் அருள்நூலை அளித்துப் பேருதவி செய்தார். அது முதற்கொண்டு அவர் செய்த நூல் அறிவுடையார் உள்ளத்தையும் அறிவையும் கொள்ளை கொள்ளும் நலமுடையதாக இன்றளவும் விளங்குகின்றது. சைவ நன்மக்கள் தம் நெறியினின்றும் ஒருவி வழுவியபோதெல்லாம் அவரை மீட்டும் அந்நெறிக்கட் கொண்டு வந்து நிறுத்துவதற்கு ஏற்றதுணையாக இருந்தது அப்பெரியார் அருளிச் செய்த தொண்டர் புராணமாகும். அப்பெரியார்

செய்த பேருதவிக்குத் தமிழ் மக்கள் யாதொரு கைம்மாறும் செய்வதற்கு ஏற்றவளம் படைத்திலர்.

அத்தகைய பேருதவி செய்தபெரும் வள்ளலாராம் சேக்கிழார் முனிவருக்குத் தமிழுலகம் என்ன உதவி செய்தது? அவரைத் தமிழர்கள் எங்ஙனம் போற்றுகிறார்கள்? அப்பெரியாரைப் போற்றுவாரும் அவர் பேரைச் சாற்றுவாரும் இங்குமங்குமாகச் சிற்சிலரே காணப்படுகிறார்கள். தமிழறிஞர்கள் செல்வம் படைத்த திருவுடையார்கள் நினைத்தால் அப்பெரியாரை உலகம் உள்ளளவும் நினைத்தற்கேற்ற குறிகளும் அடையாளங்களும் செய்ய முடியாதா? வறியராயினும் அவர் பிறந்தருளிய குன்றத்தூருக்குக் காலினால் நடந்தேனும் செல்லலாகாதா? ஆனால் செல்வம் படைத்த எத்தனை தமிழர்கள் சேக்கிழாரை நினைந்து அவரை நினைத்தற்கேற்ற குறிகளும் அடையாளங்களும் செய்துள்ளார்கள்? எத்துணை வறிஞர்கள் அவர் ஊருக்குச் சென்றுள்ளார்கள்? ஒருவருமில்லை.

குன்றத்தூர் என்னும் பெரும்பதி தொண்டை நாட்டு நாலாறு கோட்டங்களுள் சிறந்த புலியூர்க் கோட்டத்தில் பெருமையில் மிக் கோங்கிய பெரும்பதிகளுள் ஒன்று. அது சென்னையிலிருந்து தென்மேற்கில் பதினொன்கு மைல் தூரத்திலுள்ளது. சென்னையிலிருந்து ஒவ்வொரு நாளும் பற்பல மோட்டார்கள், வண்டிகள் குன்றத்தூருக்குச் செல்கின்றன. இப்பொழுது குன்றத்தூர் என்று அழைக்கப்படுகின்ற ஊர் சேக்கிழார் முனிவரால் திருநாகேச்சுரம் என்ற திருக்கோயில் கட்டப்பட்ட இடம். முன்னொரு காலத்தில் குன்றத்தூரின் ஓர் பகுதியாக திருநாகேச்சுரம் இருந்திருக்கலாம். சேக்கிழார் பிறந்தருளிய ஊர் இப்பொழுது நத்தம் என்று வழங்கப்படுகின்றது. குன்றையூர் நத்தம் என்பது நத்தம் என்று மட்டும் வழங்கப்படுகின்றதென்று கருத இடமுண்டு. குடி இருப்பு வீடுகளுள்ள இடத்தைப் பண்டைத் தமிழர்கள் நத்தம் என்று வழங்கினார்கள் என்று தொன்னூல்களினாலும் ஆன்றோர் வழக்கினாலும் நாம் அறிகின்றோம். சேக்கிழார் முனிவர் சோழநாட்டின கண்ணுள்ள

இறைவன் திருக்கோயில் கொண்டருளிய திருநாகேச்சுரத்தின் பேரழகில் ஈடுபட்டு அத்தகைய திருக்கோவிலைத் தம் குன்றத்தூரிலும் கட்டுவித்தல் வேண்டுமென்று கருதி அங்ஙனமே கட்டுவித்துத் தம் நூறு காணி நன்செயையும் அக்கோவிலுக்கு நன்கொடையாக அளித்து மற்றும் நிபந்தனைகளையும் ஏற்படுத்தினார் என்று அவ்வூரார் அனைவரும் செவிவழிக் கேட்டுவந்த செய்தியை இன்னும் அவ்வூரார் வாயிலாகக் கேட்டறியலாம். திருநாகேச்சுரத்தில் தொண்டை நாட்டு வேளாளர்கள் இப்பொழுது இல்லை. நெசவுத்தொழில் செய்யும் செங்குந்தர்கள் பல்கியுள்ளார்கள். அச் செங்குந்தர்கள் கையில் தான் திருநாகேச்சுரத்துச் சிவன் கோவில் இருக்கிறது.

திருநாகேச்சுரத்திலிருந்து குன்றத்தூர் நத்தம் சற்றேறக் குறைய அரைமைல் தூரத்திலிருக்கிறது. குன்றத்தூர் நத்தத்தில் முருகவேளுக்கும்,பெருமாளுக்கும், சிவனுக்கும் தனித்தனிக் கோவில்களுள்ளன. இங்கே சேக்கிழார் மரபிலுதித்த தொண்டை நாட்டு வேளாளர்கள் வசிக்கிறார்கள். தொண்டை நாட்டு வேளாளர்கள்—கொண்டை கட்டிகள் (கொண்டல் கட்டிகள்) என்றழைக்கப்படுகின்றார்கள். அத்தொண்டை நாட்டு வேளாளர் தெருவில் பண்டைநாள் தொட்டு இன்று காறும் வேறு எம்மரபினருக்கும் வீடு இல்லை. அவ்வேளாளர் தெருவிலே தான் சேக்கிழார் முனிவருக்குச் சைவ வேளாளர்களால் ஒரு கோவில் கட்டப்பட்டு அதில் அவர் திருவுருவம் நாட்டப்பட்டிருக்கிறது. அக்கோவிலுக்கு முப்பொழுதும் திருமேனி தீண்டுவார் திருமரபிற்றோன்றிய ஆதி சைவச் சீலர்கள் நாள்தோறும் இருகால பூசை செய்து வருகிறார்கள். அக்கோவிலை மேற்பார்த்து அதன் காரியங்களை நடத்துபவர் அவ்வூரிலே அத்தொண்டை நாட்டு வேளாளர் மரபிலே கூடல் கிழார் குடியிலே தோன்றியவரும் அவ்வூர்க் கிராம முனிசீப்பும் பெரும் நிலக் கிழவருமாகிய திருவாளர் நடராஜ முதலியார் அவர்களே. சேக்கிழார் முனிவர் திருநாள் அவ்வூரில் பத்து நாட்களாக அவர் நக்ஷத்திரத்திற்கு முன் முதல் வருஷந்தோறும் நடைபெற்று வருகின்றது. அவ்

விழாவிற்குச் சென்னையிலிருந்தும், மற்றும் பல இடங்களிலிருந்தும் பலர் செல்லுகின்றனர். அச்சேக்கிழார் கோவிலும் அவர் பிறந்தருளிய திருமனையிலே தான் கட்டப்பட்டுள்ளதாக அவ் வேளாளர்கள் வாய்மாட்டுக் கேட்கின்றோம். அக்கோவில் தொண்டை நாட்டு வேளாளர் தெருவில் இருப்பதும் மற்ற வேறு எம்மரபினருக்கும் அங்குமனை இல்லாதிருப்பதும் அவ்வேளாளர் கூற்றை வலியுறுத்துகின்றன. அக்குன்றத்தூரிலே தாமரை மலர்களால் அணி செய்யப்பட்டிருக்கும் பளிங்கு போன்ற தீம் நீரையுடைய குளம் ஒன்று சேக்கிழார் பெருமான் பின்தோன்றலாகிய பாலறுவாயரால் வெட்டப்பட்டதாகவும், அது பாலறுவாயர் குளமெனவும் அவ்வூரார் சொல்லுகின்றனர். அக்குன்றத்தூரை நெற்கழனிகள் மிக்க மருதமும், குன்றையுடைய குறிஞ்சியும், மாயோன் மேய காடுடைய முல்லையும், சூழ்ந்திருக்கின்றன.

குன்றத்தூரில் சென்று அவர் திருக்கோயிலை வலம் வந்து அக்கோவில் அவர் திருமனையில் கட்டப்பட்டதென்று ஒருவர் அறிந்தபோது அவருக்குச் சேக்கிழார் பிள்ளைப் பருவத்தில் தளர் நடையுற்று அசையும் நடைப்பருவத்தே திருவடி எடுத்து வைத்து நடந்த இடம் அதுவாமென்றும், அவர் நடந்து விளையாடல் செய்த இடமும் தெருவும் இவையாமென்றும் மனத்தில் எண்ண நேரும். தொண்டர் சீர்பரவுவார் அத்தொண்டர் புராணங்களை அவர் தமது உள்ளத்தில் சிந்திப்பதற்குத் தனி இடமாகக் கொண்ட இடம் இதுவாக இருக்கலாமென்று அவர் கோயிலைக் காண்பாருக்கு ஓர் எண்ணம் தோன்றி அதனால் அவருக்கு எல்லை இல்லதோர் மகிழ்ச்சியும் உளதாகின்றது.

உமாபதி சிவாச்சாரியார் சேக்கிழார் புராணம் செய்திருப்பதில் அம்முனிவர் காலத்துத் தொண்டைநாட்டு வேளாளர் மரபில் தோன்றிய வேறு மூன்று குடிபெயருடையார் இருந்தனரென்றும், அவர் புரிசைகிழார், கூடல்கிழார் வெண்குளப்பாக்கிழார் என்றும் கூறியிருக்கின்றார். சேக்கிழார் இறைவன் திருவடிக் கீழ்ச் சென்றமையின் அவர் குடியில் அவருக்கு நேர்

வழித் தோன்றலாயுள்ளாரை இக்காலத்துக் காணுதலரிதாகும். அவரினின்று நேர்வழியிற்றோன்றாது போயினும் மற்றும் அப் பெருங் குடியின் சினை மரபிற்றோன்றியவர் இப்போது அங்கு இல்லை. ஆனால் அக் கூடல்கிழார் மரபில் உதித்தவர்தான் முன்னர் கூறப்பட்ட நடராஜ முதலியார். புரிசைகிழார் குடியில் தோன்றியவரும் அங்கு உள்ளார்கள். இவ்விருகுடியில் தோன்றி இப்போது குன்றத்தூரில் வாழ்கின்றவர்கள் தாங்கள் அவ்வூரிலேயே பண்டைக்காலந்தொட்டு வாழ்ந்து வருவதாகவும், வேறு ஊரிலிருந்து அங்கு அவர்கள் குடியேறினவர்கள் அல்லர் என்றும், தாங்கள் அவ்வூர்ப் பண்டைக்குடிகள் என்றும் சொல்லிக்கொள்ளுகின்றார்கள். சேக்கிழார் குடிப்பேருடையவர் ஒருவர் அக்குன்றத்தூரில் வாழ்கின்றார். ஆனால் அவரின் மூதாதை ஒருவர் சிறிது காலத்திற்கு முன்பு மற்றொரு ஊரிலிருந்து அங்கு வந்து குடியேறினதாகச் சொல்லப்படுகின்றது.

தமிழ் மொழியிற் பற்றுள்ள ஒவ்வொரு மகனும் அம்மொழிக்கு எல்லையற்ற பெரும்புகழைப் படைக்கும் சீர்த்தியையுடைய தொண்டர் புராணத்தைப் பாடியருளிய சேக்கிழாரைப் பற்றிய சரிதக் குறிப்புகளைத் தத்தம் உளத்திற்கு முன்னிறுத்திப் பெருமகிழ்ச்சி யெய்தி அப்பெருமான் திருவருள் பெற்று அவரால் போற்றப்படும் மெய்யடியார் சரிதங்களை நுண்ணிதில் ஆராய்ந்து பெரும் பயனடைதல் வேண்டும்.

சில கொடையாளிகள்

[திரு. எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, B. A., L. T.,]

முற்காலத்தில் தமிழ்ப்புலவர்களையும் தமிழ் வீரர்களையும் தமிழகமன்னர்கள் போற்றி வந்தனர். முடிமன்னர்கள் காலத்திலே குறுநில மன்னர்களும் வரையாது கொடுக்கும் வள்ளல்களாயிருந்தனர். தலை, இடை, கடை யென மூன்று வகுப்பாக ஒவ்வொரு பகுதிக்கும் எவ்வேழு புலவர் வீதம் இருபத்தொரு வள்ளல்களிருந்தனரெனவும் முதலெழுவள்ளல்களில் குமணனும்

இடையெழு வள்ளல்களில் அரிச்சந்திரனும், கடையெழு வள்ள ல்களில் பாரி, ஓரி, எழினி, காரி, ஆய், பேகன், நள்ளி யென்ப வர்கள் சிறந்து விளங்கினரெனவும் அறிகின்றோம். கடை யெழுவள்ளல்களின் பெருமையைப் புறநானூற்றிலும், சிறு பாணாற்றுப்படையிலும் காணலாம். குமணனென்ற வள்ளல் பின்காலத்திலுமொருவனிருந்ததாகப் புறப்பாட்டுகளினால் தெரி யவருகின்றது. இவர்களன்றியும் பல கொடையாளிகள் தமிழ் நாட்டில் தழைத்து வந்தனரென்பதை இவண்காட்டுதும். தற் காலக் குறுநிலமன்னர்களும் ஏனைச்செல்வரும் புறநாகரீகத்தி னுழலாது முன்னோர் அடிபற்றி பாத்திரம் அறிந்து ஈவரேல் தமிழ்மொழியும் தமிழ்ச் சமயமும் தமிழர் நாகரீகமும் முன்னி லும் அதிகமாகப் பிறங்குமென்பதில் ஐயமுளதோ? பொருள் வாய்ந்த சீகாழி சிதம்பரநாத முதலியாரும் மன்னார்கோயில் மன்னெயில் வரைந்து வைத்த மாவண் முதலியாரும் இராசவல் லிபுரம் இறையொப்ப வழங்கிய பிள்ளையாரும் வடபாதிமங்கலம் வேலியாயிரந்துய்க்கும் விதவை நல்லார்களும், ஆடுதுறை, தரு மபுரம் போன்ற தரும வாதிக்கங்களும் இருக்கத் தமிழன்னையும் மக்களும் வருந்துவதேன்? அன்னார்களை அடுத்து அணுகின் உள்ளியது உறுவதாகும். அழுதபிள்ளையே பால்குடிக்கும் என் பது முதுமொழியன்றோ?

1. ஆதனுங்கன் வேங்கடத்தின் தலைவன். நாள்தோறும் இரவுபகலென்னுமல் பலரையும் காத்துக்கொண்டு விளங்கிய அறத்துறை நின்றவன். அவனுடைய நண்பர்களில் ஒருவர் ஆத்திரையனார். இவர் அவனது புகழ் கூறினல்லது வேறெ வரையும் புகழார். தாமுயிர் நண்பரென்றும் தம்முடைய வுயி ரானது தம்முடம்பைவிட்டு நீங்குங்காலத்தும் தம்மைத்தாம் மறக்குங்காலம் வருமாயின் அப்பொழுது தாம் மறப்பினல்லது மறவேமென்றனர்.

'என்னுயிர் யாக்கையிற் பிரியும்பொழுதும்
என்னியான் மறப்பின் மறக்குவன்'

பசித்த ஒக்கல்களுக்குப் போதுமானபடி யளிக்கும் இசைசால் நெடுந்தகையென்று பெருமை பாராட்டப்பட்டுளன்.

2. வில்லியாதன் இலங்கையென்னும் பெயருள்ள ஊருக்குத் தலைவன். மாவிலங்கை மன்னனாகிய நல்லியக்கோடன் வழியைச் சார்ந்தவன். இவன் நறுநெய்யுருக்கி நாள்தொறும் பசி தீர்த்ததுமன்றி 'கேட்டதற்கொண்டும் வேட்கை தண்டாது விட்டோய்' என்று புகழப்பட்டவன். இவனை நன்னாகனார்,

'யானேபெறுகவன் தாள்நிழல் வாழ்க்கை
அவனே பெறுக என் நாஇசை நுவறல்'

என்று சிறப்பித்துளார்.

3. திருக்கண்ணன் சோழிய ஏனாதி. இவன் மலையமானாட்டுள்ள கோவலூர்க்கரசன். இரவலர்க்கு வைப்புத் திரவியம் போன்றவன். இவன் திருக்கிள்ளியென்றும் பெயருடையவன்.

'கவலை நெஞ்சத்து அவலந்தீரத்

தோன்றினனென்றும் அஃது எது போன்றெனின்

'கல்கள்பொடிய, கானம் வெம்ப
மல்குநீர் வரைப்பில் கயம்பல உணங்கக்
கோடியர்நீடிய பைதறுகாலை
இருநிலம் நெளிய ஈண்டி
உருமுரறு கருவிய மழைபொழிந்தாங்கே'

என்றும் கூறப்பட்டுளது

4. சிறுகுடிப்பண்ணன் சோழன் கிள்ளிவளவனுடைய நண்பன். 'தனக் கென வாழாப் பிறர்க்குரியாளன்' என அகநானூற்றில் புகழப்பட்டுளான். 'பசிப்பிணி மருத்துவன்' என்று புறநானூற்றில் உரைக்கப்பெற்றவன். 'யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய பாணர் காண்க'. இவனிடம் வரும் இரவலரின் கூட்டமிஃதென்று கூறுவான்;

'யாணர்ப்பழுமரம் புள்ளிமிழ்ந்தன்ன
ஊணொலி அரவம் தானும் கேட்கும்
பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி
முட்டைகொண்டு வற்புலம்சேரும்
சிறுநுண் எறும்பின் சில்லொழுக்கு ஏய்ப்பச்
சோறுடைக் கையர் வீற்றுவீற் றியங்கும்

இருங்கிளைச் சிறாக்காண்டும் ; கண்டு
மற்றும் மற்றும் வினவுதும்.'

'கைவள் ஈகைப்பாணன் சிறுகுடி'க்குப் போகின்ற விரலிகள், பாணர்கள் பரிசில் பெறுவர். அஃது எத்தகைத்தெனில்,

'விறகு கொய்மாக்கள் பொன்பெற்றன்னதோர்
தலைப்பாடன்று அவன் ஈகை'

5. பிட்டங்கொற்றன் குதிரைமலைத் தலைவன். சேரனுடைய சேனாதிபதி. கூரிய வேலையும் அம்பையுமுடைய வில்லோன். இவனை,

'கைவள்ளீகைக் கடுமான்கொற்ற,
வையகவரைப்பில் தமிழகங் கேட்பப்
பொய்யாச்செந்நா நெளியவேத்திப்
பாடுபவென்ப ஈயாமன்னர் நாண
வீயாதுபரந்தநின் வசையில் வான்புகழே.'

என்று கந்தப்பிள்ளை சாத்தனார் பாடியுள்ளார். மருத்துவன் தாமோதரனார்,

'மலைகெழுநாடன். கூர்வேல்பிட்டன்
குறுகலோம்புமின்'

என்று பகைவரை நோக்கிக் கூறியதைக் காண்க. இவனது வண்மைத்திறனை மெய்ச்சிய புலவர் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்,

'இன்று செலினுந்தருமே, சிறுவரை
நின்று செலினுந் தருமே, பின்னும்
முன்னே தந்தனன் என்னாது துன்னி
வைகலுஞ்செலினும் பொய்யலனாகி
யாம்வேண்டி யாங்கெம் வறுங்கலம் நிறைப்போன்...
இனமலி கதச்சேக் களனொடு வேண்டினும்,
களமலி நெல்லின் குப்பை வேண்டினும்
அருங்கலம் களிற்றொடு வேண்டினும், பெருந்தகை
பிறர்க்கும் அன்ன அறத்தகை யன்னே,
ஈவோரரிய இவ்வுலகத்து
வாழ்வோர்வாழ அவன்தாள் வாழியவே' என்று

புகழ்ந்துளார். வடமவண்ணக்கன் தாமோதரனார் இப்பெருங் கொடையாளியை வேல்வெற்றியுடையனென்றும் பாடியிருத்தலைக் காண்க.

> ' ஒளிதிகழ் திருந்துமணி நளியிருள் அகற்றும்
> வன்புலநாடன் வயவன் பிட்டன்
> ஆரமர்கடக்கும் வேலும்.'

6. நாலை கிழவன் நாகன் ஆண்மையினுஞ் சூழ்ச்சியினு மிருந்து தளராத ஊக்கத்தினையும் நல்ல புகழையுமுடையவன். பாண்டியனுக்கு வாட்படையுதவியும், உற்றுழி அமைச்சன் போன்று அறிவு கொளுத்தியும் வந்தவன். பருந்து பசிதீர்க்கும் வேலன். 'ஞாலமீமிசை வள்ளியோர் மாய்ந்தென'ப்பரிசிலர்க்கு அளித்தவன்.

> ' வேண்டுப வேண்டுப வேந்தனதேஎத்து
> அசைநுகம்படாஅ ஆண்டகையுள்ளத்துத்
> தோலாநல்லிசை நாலைகிழவன் '

என்று வடநெடுந்தத்தனார் பாடியுள்ளார்.

7. திருக்கிள்ளி கொடையும் வீரமுமுடையோன். ஏனாதிப்பட்டம் பெற்றவன்,

> " வெல்போர்க்
> கழல்புனை திருந்தடிக் கடுமான்கிள்ளி
> நின்னை வியக்கும் இவ்வுலகம், அஃது
> என்னோ "

8. நாஞ்சில் வள்ளுவன் நாஞ்சில் மலையை உடையவன். சேரனுக்குப் படைத்துணைவன். பெருங்கொடையாளி. 'உயர் சிமையவுழா நாஞ்சில் ' என்றும், ' தடவுநிலைப் பலவின் நாஞ்சில் ' என்றும்,

> " துவன்றிய
> கயத்திட்டவித்து வறத்திற்சாவாது
> கழைக்கரும்பின் ஒலிக்கும்
> கொண்டல் கொண்டநீர் கோடையாயினும்
> கண்ணன்னமலர் பூக்கும்,
> கருங்கால்வேங்கை மலரின் நாளும்

பொன்அன்னவீ(பூ) சுமந்து
மணியன்னநீர் கடல்படரும்
செவ்வரைப் படப்பை நாஞ்சில் ”

என்ற செழிப்புடைய மலைநாடென்றும் புகழப்பட்டுளது. அந்நாட்டு வள்ளுவன் வள்ளலேயாவன்.

“ நின்இறை
மாறிவாவென மொழியலன், மாதோ,
ஒலியிருங்கதுப்பின் ஆயிழை கணவன்
கிளிமரீஇய வியன்புனத்து
மரனணிபெருங் குரலனையன் ”

(குரல்=கதிர். மரனணி=மரம்(ன்) + அணி.)

என்று துதிக்கப்பெற்றுளான். நாஞ்சநாடு என்பது நாஞ்சில் (கலப்பை) நாடா, அல்லது நாஞ்சில் என்ற மலைநாடாவென்பது ஆயற்பாலது. நாஞ்சநாடு வயல்வளம் பொருந்தியது. நாஞ்சில் நாடு மலைவளமுள்ளது. ஆகவே நாடுகளிரண்டும் வெவ்வேறுயுள்ளதெனத் துணியப்படும்.

‘ தீஞ்சுளைப்பலவின் நாஞ்சிற் பொருநன்
துப்பெதிர்ந்தோர்க்கே யுள்ளாச் சேய்மையன்
நட்பெதிர்ந்தோர்க்கே யங்கை நன்மையன்...இந்நிலம்
இலம்படு காலையாயினும்
புலம்பல் போயின்று, பூத்தவென் கடும்பே’; (கடும்பு=சுற்றம்)

இவ்வடிகளில் இந்நாட்டின் வளப்பத்தையும் நாடுடையவன் வண்மையையும் சிறக்கக் கூறியிருப்பது புலனாகும்.

9. கடிய நெடுவேட்டுவன் கோடையென்ற மலைக்குத்தலைவன். சினமிக்க நாயையும் வலிய வில்லையுமுடைய வேட்டுவன் (வேடன்). கொடையாளி, இவனிடம் பரிசுபெறுவோர்க்கு யானையை யளிப்பது வழக்கம்.

“ ஆர்கலியாணர்த் தரீஇயகால் வீழ்த்துக்
கடல் வயிற் குழீஇய அண்ணலங் கொண்மூ
நீரின்று பெயரா ஆங்குத் தேரோடு
ஒளிறுமருப்பேந்திய செம்மல்
களிறின்று பெயரல் பரிசிலர் கடும்பே”

என்று பெருந்தலைச் சாத்தனார் அவனுடைய ஈகைத் தன்மையை விளக்கியுள்ளார். அங்ஙனம், விளக்குங்கால் இரவலராகிய பாவலர் பெருமையையும் விடாமற் புகன்றுளார்.

" முற்றிய திருவின் மூவராயினும்
பெட்பின்றீதல் யாம் வேண்டலமே"

என்றது கவனிக்கத்தக்கது.

10. திருக்குட்டுவன் சோழிய ஏனாதி, மிக்க கொடையாளி. சிறிய வேழத்தை யளிக்க அதனைச் சிறிதென்று, புலவர் மதுரைக் குமரனார் உணர்ந்ததைக் கண்டு நாணிப் பிறிதுமோர் பெருங்களிறு நல்கினன் என்றுளர்.

" வலிதுஞ்சு தடக்கை வாய்வாள் குட்டுவன்
வள்ளியனாதல் வையகம் புகழினும்
உள்ளம் ஓம்புமின் உயர் மொழிப்புலவீர் "

11. நள்ளி கண்டீரத்தின் கோ. இக்கொடையாளி பெரிய குளிர்ந்த மலைத்தலைவன். பரிசிலர்க்கு நன்கலன்களையும் களிறுகளையும் அளிப்பது வழக்கம்.

" நாடொறு நன்கலங் களிற்றொடு கொணர்ந்து
கூடுவிளங்கு வியனகர்ப் பரிசின் முற்றளிப்ப"

ஆதலால் என் சிறு செந்நா நின்நசை வளன் ஏத்தி மன்னரைப் புகழ்ச்சி வேண்டிக் கிளத்தல் எய்யா தென்றனர் வன்பரணர். இவன் வண்மையால் 'புரவுக் கடன் பூண்ட வண்மையானே' பாணர்கள் மாலைப் பொழுதில் மருதப் பண்ணை வாசித்தும் காலையில் செவ்வழியை வாசித்தும் வந்த முறைமையை மறந்தனரென்றும் கூறியுள்ளார். தன்னுடைய நாடு காட்டு நாடானதனால் அருங்கல மளிக்கு மியல்பிலனாயினும் தான்

" மார்பிற்பூண்ட வயங்குகாழாரம், (முத்துவடம்)
மடை (கொளுத்து) செறி முன்கைக் கடக மொடித்தனன்,
எந்நாடோ வென நாடுஞ் சொல்லான்
யாரீரோவெனப் பெயருஞ் சொல்லான்
பிறர் பிறர் கூற வழி கேட்டிசினே."

முத்து வடத்தினைக் கை கடகமொடு ஈந்த பெரியான் ஊரும் பெயருஞ் சொல்லானாயினும் பிறரிடங் கேட்டறிந்தே னென்று புலவர் புகழ்ந்துளார். "பளிங்கு வகுத்தன்ன தீநீர் நளிமலை நாடன் நள்ளியவ"னெனவே.

12. பொறையாற்றுக்கிழான் பொறையாறு என்னு மூருக் குரியவன். இவன் நாட்டில் பகடு தரும்பெருவளமுண்டு. வட புலம் பசித்த காலையில் இக்கிழான் நாட்டில் வந்து, புலவர் சுற் றம் பசி தீர்ந்தது. இந்நாட்டில்

> துளிபதனறிந்து பொழிய
> வேலி ஆயிரம் விளைகநின் வயலே'

என்று கல்லாடனார் கூறியுளார்.

13. எவ்வி வேளாளனாதலின் 'வேள் எவ்வி' யெனப்பட் டான் போலும். இவன் மிழிலைக் கூற்றத்துத் தலைவன். தலை யாலங்கானத்துச் செருவில் வென்ற பாண்டியன் நெடுஞ் செழிய னால் தோல்வி யடைந்தவன். இவன் பாரிவள்ளலின் வழித் தோன்ற லென்பாருமுளர். 'ஒம்பாவீகை மாவேளெவ்வி', 'போரடு தானை யெவ்வி,' 'எவ்வி தொல்குடி', இவ்வடிகள் இவன் பெருமையை விளக்கும். யாழ்ப்பாணருக்குப் பரிசிலளித்தவன். அவன் இறந்தபின் பாணர் வறுமை யுற்றன ரென்ப. 'எவ்வி யிழந்த வறுமை யாழ்ப்பாணர் பூவில் வறுந்தலைபோல'. இவன் பலரோடு உண்டனனாகலின் இவன் இறந்தபின் இவன் காதலி வைக்கும் பிண்டத்தை எவ்வாறு உண்டனன் கொல்? என்று வெள்ளெருக்கிலையார் வினவுகின்றார்.

> 'உலகுபுகத் திறந்த வாயிற்
> பலரோடுண்டன் மரீஇ யோனே'

> 'பிடியடி யன்ன சிறுவழி மெழுகித்
> தன்னமர் காதலி புன்மேல் வைத்த
> இன்சிறு பிண்டம் யாங்குண்டனன் கொல்.'

14. ஆதன் முழுப்பெயர் சேரமான் சிக்கற் பள்ளித்துஞ் சிய செல்வக் கடுங்கோ வாழியாதன். இவன் பெரிய வீர

னென்பதை 'மாறு கொண்டோர் மதிலிடறி' என்பதனாலறிக. இவனுடைய பகைவர் பணிந்து கொடுத்த திரையால் இவனைச் சார்ந்தோர் பலருடைய தரித்திரத்தை அகற்றினன் என்பதனால் அவன் வெற்றித் திறன் துலங்குகின்றது.

" தன்பெருமை யின்தகவு நோக்கிக்
குன்றகழ் களிறென்கோ."

" மன்று நிறையுநிரை யென்கோ,
மனைக் களமரொடு களமென்கோ,
ஆங்கவை, கனவென மருளவல்லே, நனவில்
நல்கி யோனே நசைசால் தோன்றல்
ஊழி........
பூழியர் பெருமபியானைச்
செருமிகு நோன்தாள் செல்வக் கடுங்கோ
வாழியாதன் என்னுத் தெவ்வர்
உயர்குடை பணித்திவண், மாதோ,
நெடிதே...வஞ்சிப்புற மதிலலைக்கும்
கல்லென் பொருநை மணலினும், ஆங்கண்
பல்லூர் சுற்றிய கழனி
எல்லாம் விளையு நெல்லினும், பலவே"

என்று புலவர், இவன் பெருமையை வியந்துளார்.

15 வண்ணந்தாயன் சோழ நாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் என்று உரைக்கப்பட்டுளது. புத்த முதலாய புறமதக் கோடரி யென்றும், வேள்வி பல முடித்தவர் மரபினன், விருந்தினரைப் புரந்தவன் என்றும், இவனை ஆவூர்க் கிழார் புகழ்ந்துளார். "கேள்வியாற் சிறப்பெய்தியானை, வேள் வியான் விறன் மிகுத்தன்று". இவனளித்த பரிசிலின் பெருமை யைப் புனைந்துரைக்கும் பின்வரும் அடிகள்,

குடாஅது (மேல்பக்கம்)

பொன்படு நெடுவரைப் புயலேறு சிலைப்பிற் (ஒலிப்பிற்)
பூவிரி புதுநீர்க் காவிரி புரக்குந்
தண்புனல் படப்பை எம்மூர், ஆங்கண்
உண்டுந் தின்றும் உளர்ந்தும் ஆடுகம்,

செல்வல் அத்தை யானே, செல்லாது
மழை அண்ணாப்ப நீடிய நெடுவரைக்
கழை வளர் இமயம் போல
நிலீஇயர் அத்தை நீ நிலமிசை யானே"

நான்மறை, ஆறங்கம் இவற்றை நன்குணர்ந்த பார்ப்பனனாத லின் வேதவேள்வியைக் கண்டித்த புறச் சமயிகளைப் பொய்ய ரென்று நிந்தித்தனன்.

" முழுமுதல்வன் வாய் போகாது
ஒன்றுபுரிந்த ஈரிரண்டின்
ஆறுணர்ந்த ஒருமுதுநூல்
இகல் கண்டோர் மிகல் சாய்மார்
மெய்யன்ன பொய்யுணர்ந்து
பொய் ஓராது மெய் கொளீஇ
மூவேழ் துறையு முட்டின்று போகிய
உரைசால் சிறப்பின் உரவோர் மருக."

16. வெளிமான் ஏவலால் அவன் இளவல் பெருஞ் சித் திரனாருக்குத் தக்கவாறு மனநெகிழ்ந்து கொடை யளிக்கவில்லை யென்று வெகுண்டு புலவர் அண்ணனையுந் தம்பியையும் சினந்து பேசினர்.

" இரவலர் புரவலை நீயுமல்லை
புரவலர் இரவலர்க் கில்லையுமல்லர்
இரவலர் உண்மையுங் காணினி.''

என்று கூறிக் குமண வள்ளலிடஞ் சென்று களிறுபெற்று அக் களிற்றை வெளிமானினது கடிமரத்தில் கட்டிச் சென்றனர். அன்றியும், வாயாவன்கனிக்கு உலம் வருவோர் யாரோ ? உள் ளம் உள்ளவிந்து அடங்காது யாளிபோல இனி நெஞ்சம் எழு மென்றனர். இளவல் கொடுத்த பரிசில் சிறிதென்பதை 'புலி பார்த் தொற்றிய (வீழ்த்த) களிற்றிரை பிழைப்பின் எலிபார்த்து ஒற்றாதாகும்' என்று குறிப்பிட்டனர், வெளிமான் இறந்தபின் சித்திரனார் மனங்கவன்று பாடுவாரது சுற்றம் ஒளி மழுங்கின. முரசுங் கண் கிழிந்தன, யானையும் மருப்பிழந்தன, என்றுரைத்

துத் துன்பக் கடலிற் சுழல்வதைவிட இறந்து படுதலே தக்க செய்கை என்றனர்.

> " மாரி இரவில் மரங்கவிழ் பொழுதின்
> ஆரஞருற்ற நெஞ்சமொ டோராங்குக்
> கண்ணில் ஊமன் கடற்பட்டாங்கு
> வரை யளந்தறியாத் திரையருநீத்தத்து
> அவலம் மறுசுழி மறுகலின்
> தவலே நன்று, மற்று தகுதியும் அதுவே"

(மரம் - மரக்கலம், அஞர் - துன்பம், நீத்தம் - வெள்ளம், அவலம் - துன்பம், தவல் - இறந்துபடுதல்).

பண்டைத் தமிழ்ச் சொற்கள்.

III

(திரு. M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.)

கடவுளைக் குறிக்கும் பண்டைத்தமிழ்ச் சொற்களில் "கந்தழி" என்பது ஒன்று. அச் சொல்லில் அடங்கியிருக்கும் பொருளை ஆராய்வோம் :—

2. கந்தழி—என்னுஞ் சொல், கந்து + அழி என்னும் இரண்டு சொற்களாலாகியது. கந்து என்பது பற்றுக்கோடு. பற்றுக்கோடானது ஒரு பொருள் மற்றொரு பொருளைப் பற்றிக்கொண்டிருத்தல் ஆகும். ஒரு படர்கொடி ஒரு கொழு கொம்பைப்பற்றிக் கொண்டிருத்தல் போல்வது. யானைகட்டுந் தறி கந்தழி என்று கூறப்படுகிறது. அழி என்னும் சொல் முதனிலைத் தொழிற் பெயராய் அழித்தல் என்னும் பொருளில் வந்தது. அழித்தலாவது இல்லாமற் செய்தலாகும். ஆகவே கந்தழி என்னும் தொடர்மொழி, (compound word) பற்றுக் கோடு இல்லாமற் செய்தல் என்று பொருள்படும். அது தொழில் ஆகு பெயராய்ப் பற்றுக் கோடில்லாமற் செய்தவனை

அதாவது பற்றுக் கோடில்லாதவனைக் குறித்தது. கடவுளைப் பற்றுக் கோடில்லாதவன் என்று பண்டைத் தமிழ்மக்கள் அறிந்தார்கள்; ஆதலினால் அவனுக்குக் "கந்தழி" என்று பெயரிட்டார்கள்.

2. கடவுள் தனக்கு ஒரு பொருளும் பற்றுக் கோடில்லாதவன்; ஆனால் அவன் எப்பொருளுக்காவது பற்றுக் கோடாயுள்ளவனா ? என்னும் கேள்வி பிறக்கும். எப்பொழுதும் ஒரு இன்மைக் கருத்து அதற்கு எதிரிடையான உண்மைக்கருத்தை அவாவியே நிற்கும். பற்றுக் கோடில்லாதான் கடவுள் எனவே பற்றுக்கோடுள்ள பொருள் எது? அல்லது பொருள்கள் யாவை? பற்றுக் கோடுடைய பொருள்கள் உயிர்ப்பொருளகள் ஆகும்.

3. கடவுளும் உயிர்களும் உருவமில்லாத அறிவுப் பொருள்கள். அறிவுப் பொருள்களில் ஒன்று மற்றொன்றைப் பற்றுவது எப்படி ? உயிர்கள் ஒன்றை யொன்று பற்றுதல் அறிவினாலே (Consciousness) தான் ஆகும். இந்த அறிவில் ((Consciousness) வேட்கையும் செயலும் அடங்கி யிருத்தலால் உயிர்கள் தங்களுடைய அறிவுவேட்கை (இச்சை) செயல்களுக்காகக் கடவுளைப்பற்றி நிற்கின்றன என்பது பெறப்பட்டது. கடவுளுடைய அறிவுவேட்கை செயல்களை முறையே உயிர்களுடைய அறிவு வேட்கை செயல்கள்பற்றி நிற்கின்றன. அதாவது கடவுளுடைய அறிவு வேட்கை செயல்கள் நிகழாவிட்டால் உயிர்களுடைய அறிவுவேட்கை செயல்கள் நிகழா. சைவசித்தாந்த நூல்கள் உயிர்கள் ஒன்றைச் சார்ந்து நிற்குந் தன்மை உடையனவன்றித் தனித்து நிற்கும் தன்மை உடையன வல்ல என்று கூறுவது இந்த உண்மையையே. இதனைத்தான் தாயுமான சுவாமிகள் அவனன்றியோரணுவுமசையாது என்று கூறியுள்ளதும் ஆகும். We live move & have our benign Him (God) என்று ஆங்கிலத்தில் கூறப்பட்ட உண்மையும் இதுவே. கடவுள் பற்றுக்கோடில்லாதவன் எனவே, அவன் தனது அறிவுவேட்கை செயல்களுக்கு வேறொரு பொருளைப் பற்றுவான் அல்லன், என்பதாகும். அவன் அறிவில் நிறைவுடைய

வன். மக்கள் போன்று கருவிகளால் ஒன்றொன்றாய் அறியாது, கருவிகள் ஒன்று மில்லாது அறிந்தாங்கறியும் தன்மையுடையவன். அவன் உயிர்களிடத்தில் திருந்திய வேட்கை அல்லது அன்பு உடையவன்; மக்கள்போன்று அவன் தனக்கென ஒன்றும் வேண்டாதவன். செயலால் அவன் மக்கள் போன்று ஒன்றையுங் கருவி கரணங்களாற் செய்யாது எதனையும் நினைத்த மாத்திரையே செய்யவல்லவன். ஆகவே கடவுள் அறிவுபற்றி முற்றறிவு உடையவன்; வேட்கை பற்றிப் பேரருளுடையவன்; செயல் பற்றி முடிவில் ஆற்றல் உடையவன், என்பது பெறப்பட்டது. இந்தச் சொல் இப்பொழுது தமிழ்ப்பேச்சு வழக்கிலில்லை. இவ்வாறு கந்தழி என்னும் சொல்லினால் கடவுள் இன்ன மாயாமலரகித குணம் உடையவன் என்றும் உயிர்கள் இன்ன மலமாயா சகித குணம் உடையவர்கள் என்றும், பண்டைத் தமிழ் மக்கள் பண்டைக்காலத்திலே அறிந்திருந்ததாக நாம் தெரிகிறோம்.

3. கந்தழி என்னும் சொல்லில் அடங்கியிருக்குங் கருத்தை மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில்,

உற்றவாக்கையி னுறுபொரு ணறுமல ரெழுதரு நாற்றம்போற்
பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொரு ளப்பொருள் பாராதே
பெற்றவாபெற்ற பயனது நுகர்ந்திடும் பித்தர்சொற் றெளியாமே
அத்தனாண்டு தன்னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே.

அம்மை அப்பன் துணை

சிவநெறி மாண்பு

[ரத்னபுரி K. சிதம்பரநாதனவர்கள்]

இலங்கை அரசினர் பல்கலைக்கழகத்து இந்து மாணவர்களும் யாழ்ப்பாணத்து உபாத்திமார் கல்லூரி மாணவர்களும் பிறருங்கூடிய இந்துமாணவரியக்கத்து 3-ம் ஆண்டு வெளியூர்க் கூட்டங்களிற் கடைநாளாகிய 1929ஆ டிசம்பர்மீ 26-ம் நாள் அநுரதபுரி "சிற்றம்பல" மண்டபத்தில் ஷை பல்கலைக் கழகக் கணிதப்பெரும்போதகாசிரியர் சைவத்திரு C. சுந்தரலிங்கம் M. A., B. Sc., அவர்கள் அவைத்தலைமையில் யாழ்ப்பாணத்து பட்டூர் நியாயவாதி சித்தாந்தச்செம்மல், பண்டிதர் க. சிதம்பரநாதனார் அவர்களால் நிகழ்த்தப்பெற்ற சொற்பொழிவு.

சைவசமயமே சமயம் சமயாதீதப் பழம் பொருளைக்,
கைவந்திடவே மன்றுள்வெளி காட்டுமிந்தக் கருத்தை விட்டுப்,
பொய் வந்துழலும் சமயநெறி புகுதவேண்டா முத்திதரும்,
தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாரும் செகத்தீரே.

உலகத்தீரே! சமயங்களுட் சைவசமயமே சிறந்தது. சமயங்களுக்குமெட்டாத பழவுண்மையை அண்மையிற் றெளிவாகக் காட்ட அறிவு வெளியாம் அம்பலமேயிருக்கின்றது. அவ்வெளியின் உண்மை உட்பொருளை உணராது (உண்மையென ஏகதேசத்துப் பொருள்களைக் காண்பித்து நிறைவின்மையாற்) பொய்யே நிறுத்தும் பிறசமய வழிகளில் ஒழுகாதீர். இருள் மருள் நீக்கி இறவாப்பேரின்பமீந்தருளும் திருக்கூட்டப் பொலிவிற்சேர்ந்து இறையருளை நுகர்ந்து நிலைத்தற்கு வம்மின்! வம்மின்!!

இஃது தாயுமானார் திருவாக்கு. என்னை? எந்நெறியாளருந் தந்நெறியே மெய்ந்நெறியென்பதொருதலையாக! இக்கூற்றும் அத்தகைத்தாகவொக்கும் என்னில், அன்று; சிவநெறி பல்வேறு காரணங்களாலும் தலைமை நிலையுடையது என்னுமுண்

மையை உலகினர் அறிவாராய்ச்சிக்கு வரையறை காட்டாது ஏற்ப எடுத்து விளக்கிக்காட்டுவதே இச்சொற்பொழிவாம் என்க.

உலகிலுள்ள மக்கட்கெல்லாம் இன்பம் துன்பம் என்ற இருவகை யுணர்ச்சியுமியல்பிலே யிருத்தலானும் துன்பம் வெறுக்கப்பட இன்பமே விழையப்படுதலானும் அவ்வின்பமுமே ஈண்டுச் சின்னாணிலையாய சிற்றின்பமாகக் காணப்படுதலானும், என்று மழியா நிலைபேருன பேரின்பத்தை யடைவதே பிறவிப்பெரும் பயனென அறிவுதலைப்பட்டோர்க்குத் தோன்றுதலானும், அவ்வாறப்பேரின்பத்தை அறிந்தடைந்தெய்தி யழுந்தியிருப்ப மக்கள் கடைப்பிடித்தொழுகும் வழிகளும் முறைகளும் பல்வகை நெறிகளாகும். அவைதாம் சமயங்களெனவும்படும்.

அச்சமயங்கடாம், பல்வேறு நாட்டினர்க்கும் பல்வேறு பழக்க வழக்கமுடையோர்க்குமேற்பப் பல்வேறு வகையா நிலவுவனவாம். இக்காலத்து உலகிற்பெரிதும் வழங்கும் சமயங்கள் இந்துமதம், பௌத்தமதம், கிறிஸ்துவமதம், மகம்மதியமதம், யூதமதம், செரோஸ்ரிய மதம் முதலியவாம். இவற்றுள் இந்துமதமென்பது பொதுவில் நான்மறைகளாகும் வேதங்களை முதனூலாகக்கொண்டு கிளைத்தெழுந்த அறிவு ஆராய்ச்சிகளானுற்ற சைவம், வைஷ்ணவம், காணுபத்தியம், வைரவம், கௌமாரம், வாமம், வேதாந்தம் முதலிய பல சமயங்களையும் தன்னகத்துக்கொண்டுள்ளது. பௌத்த மதத்தையுமே; அதன் தலைவர் இந்துவாயிருந்திறந்தமையின் இந்துமதத்தின் கிளையேயெனக் கூறுவாருமுளர். மகாத்மா காந்தியடிகளும் இலங்கையில் பௌத்தருக்கு இவ்வாறு கூறிப்போந்தது காண்க. அஃதெவ்வாறுயினுமாகுக. ஏனைய மதங்கள்யாவும் தத்தம் தலைவராகிய ஒவ்வோர் பெரியோர் வாயிலாணிறுவப்பெற்று அவர்களது பேரானும் குறிப்பிட்ட உருவமூர்த்திகள் பேரானும் வழங்கிவருவனவாக சிவநெறியொன்றே சிவத்தையடையும் மதமெனநின்று ஓர் மனுடனாலும் கற்பித்து நிலைநிறுத்தி வகுத்ததெனப்

படாமல் அடையும் பயனைக்குறித்து அழைக்கப்படுவதாம் பெருமையுடைத்தாதல் தெளிபு.

இனி, சிவநெறி யென்பது சிவத்தை யடையும் நெறி யென்ருக, சிவம் தான் யாதென ஆராய்தலேற்புடைத்தாம். "செம்பொருள்" எனத் தெய்வப் புலமைத் திருவள்ளுவனாராற் குறிக்கப் பெற்றதும், "செம்மையே யாய சிவபதம்" என மணிவாசகப் பெருந்தகையாற் சுட்டிக் காண்பித்ததும், இன்பம் எல்லாம் கூடிய பெரும்பொருள் என்பதும், சிவம் என்ற சொல்லால் நம் செந்தமிழில் அறியப்படுவதாகும். "சைவம் சிவத்தோடு சம்பந்தம்" என்று சிற்றம்பல நாடிகள் கூறியதுமிது குறித்ததே. தேம்பாவணி யென்னும் கிறிஸ்துவ நூலினுமே "சிவம்" எனும் சொல் பெருஞ்சுகம் என்ற பொருள்தர வழங்கியுள்ள தென்பர். எனவே சிவநெறி யென்பது பரம சுகத்தைத் தேர்ந்து தெளிந்து துய்க்கு நெறியாம் என்ப. அப்பரம சுகந்தான் "எப்பொருள் யார் யார் வாய்க்கேட்கினு மப்பொருள்,மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்றபடி, அவ்வவர் அறிவு நிலைக்கும் காலதேச வர்த்தமானங்களுக்கு மேற்பத் தேர்ந்து தெளிந்து துய்க்கப் பெறுமாகவே, சிவநெறியும் மெய்ப்பொருளைக் காணு நெறி, மெய்ப்பொருளைத் தெளியு நெறி, மெய்ப்பொருளைத் துய்க்கு நெறி என விரிந்து,

> யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே
> மாதொரு பாக னார்தாம் வருவர்மற் றத்தெய்வங்கள்
> வேதனைப் படுமிறக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யும்
> ஆதலா லவையிலாதா னறிந்தருள் புரியுமன்றே.

என்ற சிவஞானசித்திப்பாவிற் கிணங்க, "எவ்வெவர் தம்மையேனும் யாவரே யெனினும் போற்றின், அவ்வவரிடமாக் கொண்டே யவர்க்கருள் புரியும்" இறை நலத்தைக் காட்டி, உலகிலுள்ள அறிவாளரது ஆராய்ச்சிகளெல்லாவற்றையும் ஒரோவகை உட்பொருள்கள் (சேரபானம்) ஆகக் கொண்டு தன்னகத் தடக்கித் தானே தலைமை (இராசாங்க) நிலையில் அமர்ந்திருக்கும் நெறியாமென்பது தெளிவாம்.

அங்ஙனமாயின், எல்லாநெறியும் மெய்ந்நெறியாதல் ஒருப் பாடாம். ஆகவே அவற்றுட் டலையாய நெறி சிவநெறியே யென் றல் யாண்டையது? என வினு நிகழும். அதற்கு விடையாகவே சிவஞான சித்தியாரில்,

"ஓது சமயங்கள் பொருள் உணரு நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாம லுளபலவு மவற்றுள்
யாதுசம யம்பொருணூல் யாதிங் கென்னில்
இதுவாகும் அதுவல்லது எனும் பிணக்க தின்றி
நீதியினல் இவையெல்லாம் ஓரிடத்தே காண
நின்றதியா தொருசமய மதுசமயம் பொருணூல்
ஆதலினல் இவையெல்லா மருமறையா கமத்தே
அடங்கியிடு மிவையெல்லாம் அரனடிக்கீழ் அடங்கும்"

எனக்கூறியதாம். என்னே? யானை கண்ட குருடர்போற் கண்ட கண்டனவே முடிபாமெனக் கூறி நிற்பார் பல்வகை மதத்தினரு மாக, அவர்கண்ட உண்மைகள் எல்லாவற்றையும் ஒரோ வழி ஒத்துத் தன்னகத்தே காண்பித்து மேலாம் முடிபைக்காட்டுவது சிவநெறி யென்ப. அருமறை யாகமம் அறிஞர் கண்ட பொருள் முடிபெல்லாவற்றையும் காட்ட அம்மறையாகமம் எனப்படும் சொல்லறிவுமே அரனடி என்னும் சிவத்திண்மையாகும் செம் பொருளில் அடங்கி நிற்ப, மேல் முடிவு (சித்தாந்தம்) செய்வதற் குப் பிறிது உண்மையிலதாய் அறிவாராய்ச்சி யடங்கியவிடம் காண் பித்து நின்றது சிவநெறி யெனினுமமையும். இதுவே சிவநெறி யின் தலை மாண்பாமெனக்கூறலாம். ஏனைய நெறியாளர் போன்று உண்மைக்கு வரையறை கட்டிக் கிணற்றுத் தவளையது போன்ற அறிவு முடிபு கொள்ளவிடாது, நுண்ணாராய்ச்சி கொள்ளுமட்டுங் கொள்ளத்தந்து சொல்லிறந்த பரவெளிச் சுகத்தைக் கண்டு களித் துண்டு திளைக்கத் தருதலின், உலகப்பொது நெறி (Universal religion) ஆதற்குரிய பெருமையுடையது சிவநெறியே யன்றோ? இதனை அறியாதார், சிவநெறியினை இற்றை நாட்கண்ட சிற்சில வரம்பிலா வழக்குகளோ டிணைத்துக் குறுகிய நெறியெனக் கொண்டு பிதற்றுவர். அன்னோர்க்குச் சித்தாந்தம் தெளியப் பெறலே விழைவாயின் "மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த்

தொடங்கின்" "வார்த்தை சொல்லச் சற்குருவும் வாய்க்கும்" எனக்கூறி நிறுத்தி அப்பாற் செல்வாம்.

சிவநெறியிற்றானே இறை, உயிர், இருள் (=தளை, கட்டு) (பதி பசு பாசம்) என்னும் முப்பொருள் நிச்சயம் தெளிவாகக் கூறியுள்ளதெனலாம். பதி யுண்மையைக் குறிக்காத, ஒவ்வாத, பௌத்தம் முதலிய நாஸ்திக மதங்கள் போலன்றியும், பதி யொருவனையே கண்டு, அவன் சிருட்டியால் மனிதருண்டாயதாக் கொண்டு, சுகதுக்க விளைவுகட்கு வகை தெரிவிக்க மாட்டாது முழுப் பொறுப்பையும் கடவுள் மேலே ஏற்றி, அருள், நிறை ஆகிய குணங்களை அவற்குக் காண்பிக்க முடியாது தத்தளிக்கும் கிறிஸ்துவ முதலிய பல ஆஸ்திக மதங்கள் போலன்றியும், தனித்து நின்று முப்பொருளையும் அநாதி காட்டி நிச்சயிப்பது சிவநெறி யொன்றே யாம். என்னை? உண்மை அறிவு இன்பம் (சச்சிதானந்தம்) திரண்ட நிறைபொருள் பதியாக, நிலையின்மை அறிவின்மை (அசத்து அசித்து) என்ற தன்மைகளுள்ள கட்டுப் பொருள் பாசமாக, இவ்விரண்டுடனும் சார்ந்ததன் வண்ணமாய்க் "கண்டதைக் காட்டும் பளிங்கு போன்ற" தன்மைத்தாய்ச் சதசத்து எனப்படுவதாயுள்ள பொருள் பசுவாகவும், இம்மூன்றும் அநாதியாய் ஒன்றினொன்று தோன்றாததாய் நிலையாயுள்ளன வெனக் காண்பிப்பது சிவநெறியொன்றே யாம். இறை உயிர் இலக்கணத்தை இரவியொளியும் கண்ணொளியும் போல எனவும், இறைவன் திருவருளே மாயையா மென்றும், அதுவே மறைப்பாய் நின்று பாசத்தொடு கூட்டி உயிரை மயக்கியும், பின் பக்குவ காலம் உற்றபோது அறிவாய் நின்று பதியோடு கூட்டி உயிரை வீட்டின்பத்து நிறுத்துவதெனவும் காட்டுவதும் சிவநெறியன்றே. அன்றியும் இதிற்றானே "அகரமுதல வெழுத்தெல்லா மாதி பகவன் முதற்றேயுலகு" என்றவாறு "அக்கரங்கடோறுஞ் சென்றிடும் அகரம் போல நின்றனன் சிவனும்" என்றும், எனப்பதிப் பொருள் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் சித்தாகி நின்று உயிரினம் யாவற்றையும் மெய்களையும் நிலைத்து நிற்பானியக்குவனெனக் காட்டியதுமாம் என்க.

அகர முதல என்றது, அங்காப்பு மாத்திரையானுய உள் வளித் துரப்பு அகரத்தைத் தோற்றுவிப்பதே யன்றி மற்றெல்லா எழுத்துக்களதோசையையும் தோற்றுவிப்பதற்குச் சிலவற்றோடு (உயிர்க்கு) ஒன்றாயும் பிற சிலவற்றோடு (மெய்க்கு) உடனாயும் நிற்குமாற்றால் தொழில் பிறப்பியக்க மாறிய முறையில் எழுத்துக்களெல்லாவற்றையும் முதலாய் நின்றியக்குவ தென்பதாக் கொள்க வென்றபடியாம்.

மேலும் இச்சிவநெறி யொன்றிற்றானே உயிர்களுக்குள்ள சத்த சத்தித் தன்மை (Matter and energy) விளக்க அம்மையோ டப்பன் (சதிபுருட) முறைமையாக இறைவனைக் காண்பித்துள்ள உண்மையே, இதன் பெருமையையும் சிறப்பையும் காட்டுவதாம். என்னை? ஏனைய மதக் கடவுளர் போலன்றி, உமைபாகனுஞ் சிவனுயிருப்பவன் எம் சிவ நெறியிறை யன்றே. பெண்மையைப் புறக்கணித்துக் கடவுளை ஆண் மகனாக மாத்திரமே காண்பித்துள்ள பிறமதங்களைப் போலன்றி,

"அருளது சத்தியாகும் அரன்றனக் கருளையின்றித்
தெருள்சிவ மில்லையந்தச் சிவமின்றிச் சத்தியில்லை
மருள்தனை அருளால் வாட்டி மன்னுயிர்க் களிப்பன் கண்கட்
இருளினை ஒளியாலோட்டும் இரவியைப் போல ஈசன்."

என்றவாறு, அருளே சிவசத்தி யாமென்றும், அவளின்றி அவனுமேயில்லை யென்றும், அவளே இரவியொளி இருளையோட்டுவதுபோல் உயிர்களது மயலை நீக்கி மெய்யறி வீயும் சத்தியாமென்பதும் அவளைக் கொண்டே இறைவன் இருளையோட்டியுயிர்க்கருள் புரிவன் என்பதும் காட்டியது சிவ நெறியன்றே. "இருமையினின்றி இயலாதுலகம்" என்பது மேனாட்டு விஞ் ஞான சாஸ்திரிகளும் ஒத்துளதாதல் கொண்டு இக்காலத்து இளங்கல்வியாளர் இவ்வுண்மையின் திண்மையைக் கடைப்பிடிக் கற்பாலர்.

மேலும் இச்சிவநெறியினிற்றானே அறிவாற்றல், உடலாற்றல், மனவாற்றல்களுக்கேற்ப இறைவனைப் புறத்தும், அகத்தும், அகம்புறத்தும் ஒன்றினின்றும் கண்டு வழிபடுதலாகிய

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை நெறிகள் திறுவப்பட்டுள்ளதாகும். என்னை? பணிப்போனிடம் பணி யாளன் பணிந்து நின்று தயைபெறுவதுபோல் இறைவனைப் புறத்தே பெரும்பொருளாகக்கொண்டு கைகூப்பிக் கால்வருடி ஆலயத்திலுருவமைத்து நன்னுளிலாவது போற்றி வேண்டிய பெறுதலாகிய ஆண்டான் அடிமை முறையாம் தாதமார்க்கம் சரியையாகவும், தந்தையிடம் தநயன் உரிமைபேசிக் கிட்டநின்று மெய்தீண்டி உளங்கனிவித்து உவப்பித்து வேண்டிய பெறுவது போல் இறைவனைக் கும்ப விம்ப லிங்க உருவத்தில் மலர்சூட்டிப் பதினாறுவகை யுவப்பித்தலும் (சோடசோபசாரம்) பணித்து நித்தியபூசையென்னும் கிரியைகளையும் இயற்றிச் சந்தியாவந்தன மென்னும் மந்திரகிரியை பாவனைகூடிய நித்திய ஒழுக்கங்களையும் ஒழுகி அண்மையிற்கண்டு அன்புருக்கால் என்புமிளகி உடல் புள கித்து ஆடியும் பாடியும் இன்புற்று நின்று வேண்டுவ பெறுதலா கிய தந்தை மகன் முறையாம் சற்புத்திர மார்க்கம் கிரியையாக வும்; தோழனுடன் தோழன் உரிமையோடு உறவும் பாராட்டி வழக்கிட்டுப் புறம்பின்றி நெருங்கி நின்று வேண்டுவ பெறுமா போல், இறைவனைத் தன்னகத்தே பிராணனையியக்கி நிறுவித் தன்னுடம்பிலேயே "காயமே கோயிலாகக் கடிமனமடிமை யாக, வாய்மையே தூய்மையாக, மனமணி இலிங்கமாக, நேயமே நெய்யும்பாலா நிறைய நீர் அமையவாட்டிப், பூசனை ஈசனுர்க்குப் போற்றவி காட்டினோமே" என்றவாறு கொண்டு கண்டு பாவ னையால் தனனுள்ளே தலைவனென்றுணர்ந்து மூலகுண்டலியை எழுப்பிப் புருவமத்தியிற் சுடராகிய கொழுந்துவிட்டெரிய உரு கும் அமிர்தத்தையுண்டு திளைத்து இன்புற்று வேண்டிய பெறுத லாகிய தோழமை முறையாம் சகமார்க்கமே யோகமாகவும்; தலை வனும் தலைவியுமாய இருவரும் உடல்வேறுயிரொன்ருய் நின்று இரண்டறறொன்றற்று ஒருவரதினபம் மற்றவரதாக ஒன்றி உரிமை, உறவு, உயிர்த்துணை பூண்டுள்ளவர்போல் இறைவனை உயிர்தன்னோடு இரண்டற்று ஒன்றேயாய் (அத்துவிதக் கலப் பில்) "தன்னுளே சகமும் சகத்துளே தானும்" ஆகி "அவ னேதானே ஆகிய வந்நெறி ஏகனுகி" "தந்ததுன்றன்னைக்

கொண்டதென்றன்னை '' என்றபடி '' இறை கலந்தவின் வெள் வளை சோர எனதுள்ளங் கவர்கள்வனாய் '' கணவன் மனைவி முறையில் அகத்திணையின்பத்து நிறைவாகிய பேரின்ப நுகரு நிலையில் கண்டுகொண்டு வேண்டிய பெறுதலாகும் தலைவன் தலைவியர் முறையாம் சன்மார்க்கமே ஞானமாகவும் கூறிவிரித்து விளக்கப்பெற்று மக்கள் யாவர்க்கும் அவரவர் நிலைக்கேற்ப அறிவின்பம் பெருக்க வழிகாட்டி நிற்பது சிவநெறியன்றே. ஏனைய சில மதத்தர்போல் நுண்ணறிவொன்றினாலேனும், அன்றி அஃதின்றிய நம்பிக்கையாலேனும், அன்றி விசுவாசத்தாலேனும் மாத்திரமே இறைவனருள் பெறலாமெனச் சுட்டித்தொழுகை முறையை வரையறுத்துளதன்று சிவநெறியென்க.

மேலும் சிவநெறியிற்றானே ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலமும் " நெல்லினுக்கு முளை தவிடு உமிபோல் '' நின்று உயிர்களை மயக்கி வினை செய்வித்து இன்பதுன்ப நுகர்விக்குமென்பதும், அவற்றுள் ஆணவம் மயல் என்னும் அறியாமையிருளாய் உயிரை அநாதியேபற்றி நின்று என்றுமழியாததாய் முத்தியினும் " இரவிமுன்னிருள்போல் '' செயலற்று நிற்பதென்றும் கன்மம் விட்டவிடத்துத்தோன்றிப் பிரவாக அநாதியாய் நின்று இயற்றப்படுங்கால் நல்வினைத் தீவினை எனப்படும் ஆகாமியமாய்ப் புத்தியிற்கட்டுண்டு (நான் செய்தேன் பிறர் செய்தார் எனது யான் என்னுமிக்கோணல்) புண்ணியம் பாவம் என்ற சஞ்சிதமாய்ப்பின் நுகர்ச்சிக்கு வரும்போது இன்பம் துன்பம் என்ற பிராரத்துவமாய் வருவதென்றும்; மாயை உயிர்கட்குத் தனு கரணம் புவனம் போகம் எனப்படும் நிலைக்களனாய் உயிர் அநாதியானமைபற்றி முற்றுமழியாதிருக்குமாற்றால் காரண காரிய அநாதியாய் இன்பதுன்ப மூட்டைகளை உண்ணவிடங்காட்டி நிற்பதென்றும் விளக்கியதாம். என்னை! அநாதி எனப்பட்டது இறை உயிர் இரண்டற்கும் சித்துசத்தாம் தன்மையில் முற்றும் (infinite & eternal) ஆணவவியல்பில் ஆன்மகுணமாந்தன்மையில் ஏகதேசமாயும் (Infinite & Primordial) கன்ம வியல்பில் விட்டவிடந் தொட்டென்று நிற்றலில் பிரவாக

(தொடரும்)

திருஞான சம்பந்தர்—செந்தமிழ் நாடகம்.

[திருவாளர் S. முத்துக்குமாரசாமியா பிள்ளையவர்கள்]

(முன் ௬௫௮-ம் பக்கத்தொடர்ச்சி)

எழுந்தருளும் பெருமை கேட்டருளி, மங்கையர்க் கரசியார் எய்துதற்கரிய பேறு எய்தினர். நம்முடைய வாழ்வு எழுந்தருளிய தென்று, என்னை, எதிர்கொண்டு அடிபணிவீர் என்றருளினர்.—(என்று கூறி மீளவும் பணிந்து போற்றினர்).

(அழைத்துக் கோவிலுக்கு வருதல்). மதுரை கண்டு "மங்கையர்க்கரசி" பாசுரம்.

மூன்றும் அங்கம்—நான்காம் காட்சி.

இடம்:—மதுரை அரண்மனை.

காலம்:—முற்பகல்.

நடர்:—மங்கையர்க் கரசியார்.

நெடுமாற மன்னர்:—(கூன்பாண்டியன்).

மங்கையர்க்கரசியார்:...மன்னர் முன் சென்று:—

அன்பு மிக்குடைய எம் தலைவ,

ஆலவா யமர்ந்தார் தம்மைக் கும்பிடவேண்டும். விடை தந்தருளுக.

மன்னர்:—என் உயிரனையாய்,

செல்க, நீ விரும்பியவாறே.

தாதியர் தம்மைச் சூழத் தனித் தடையொடும் சென்று நம்பரை வணங்கித் தாமும் நல்வர வேற்று நின்றார்.

இடம்:—மதுரைக் கோவில்.

காலம்:—முற்பகல்.

நடர்—திருஞான சம்பந்தர், குலச்சிறையார், மங்கையர்க் கரசியார், கோவில் தொண்டு செய்வோர் முதலியோர்.

திருஞான சம்பந்தர் கோவில் வெளிமுன் சென்று நில முறப் பணிந்து, மெய்ம்மயிர் பொடிப்ப, கண்ணீர் வார, நின்று ஏத்துகின்றார்.

திருச்சிற்றம்பலம்.

" நீலமாமிடற்-றாலவாயிலான்
பாலதாயினர்-ஞாலமாள்வரே"
" அடிகளாலவாய்-படிகொள் சம்பந்தன்
முடிவிலின்றமிழ்-செடிகணீக்குமே."

திருச்சிற்றம்பலம்.

இவ்வாறு துதித்துக் கோவிலுட் புகுந்தார். எதிர் செல லாகாதென்று உள்ளிருந்த அம்மையார், இவர் புகுந்ததும் வணங்கினார். உடனே,

குலச்சிறையார்:—பிள்ளையார் கழல்வணங்கி, எம் இறையே! இதோ கைகுவித்து நிற்கும் அம்மைதான், வளவர் கோன் பாவையார்.

திருஞானசம்பந்தர்:—பெருங்களிப்புடன், விரைந்து, எதிர் அணைந்தார்.

தேவியார், சிவக்கன்றின் திருவடி, தன் தலை பொருந்த முன் விழுந்தார்.

வள்ளலார், அருளொடுந் திருக்கையாலெடுத்தார்.

அம்மையார், தம் மனக்கருத்து முற்றியதென மதித் தார்.

கண்ணீர் மல்கிற்று. பவளவாய் குழறவும்,

அம்மையார்:—"யானும் என்பதியுஞ் செய்தவம் என்கொல் ?" என்று மீண்டும் வணங்கினார்.

திருஞானசம்பந்தர்:—"புறச் சமயத்தாற் சுற்றப்பட்டும், திருத் தொண்டினை மேற்கொண்டு வாழும், உம்மைக் காணவே வந்தனம்."

குலச்சிறையார்:—எங்கள் தவப் பெரும,

நாங்கள் உற்ற துன்பம் இனைத்தெனக்கூற வியலாது.
(அம்மையார் வணங்கினர் மீண்டனர் மாளிகைக்கு).

கோவிலில் உள்ள அடியார்களும் பணிசெய்வோரும் :

திருஞான சம்பந்தர் திருவடி வணங்கி:—

இருளில் கிடந்து தியங்கும் எங்கட்கு நல்லொளியாய்த் தோன்றிய ஞான சூரியரே !

எல்லையில் தவஞ்செய்தோம், ஆதலால், இங்கெழுந்தருளப் பெற்றோம். எங்கள் பிராட்டியாரும், மன்னனும் அமைச்சனும் வேண்டிய குறையை, முடித்துத்தர வேண்டுகின்றோம்.

திருஞானசம்பந்தர்:—அன்பர்களே, அஞ்சல் விடுமின்கள், மதுரை நாயகனார் திருவருளால் யாவும் இனிதே நிறைவேறும்.

இன்புறும் அமைச்சர், வெளியிலழைத்து வந்து, திருமடம் காட்டினார். அன்பர்கள் போற்ற, தம் பரிசனத்தொடும் அங்கு அமர்ந்தார். (விருந்தளித்தல்)

நான்காம் அங்கம் - முதற்காட்சி.

இடம்:—மதுரை அமண் பாழி.

காலம்:—மாலைப் பொழுது.

நடர்:—அமண் குருக்கண்மார்.

அமண் குருக்கண்மார்கள் யாவரும் ஒருங்கு கூடினர்.

அமண்குருக்களுள் தலைவர்:—அடிகண்மீர்,

இன்று காலை முதல், இதுவரை, இவ்வூரில் இந்தச் சைவர்கள் படுத்தின பாட்டைப் பார்த்தீர்களா ? இருப்பது கொஞ்சப் பேர்தான். அவர்களுக்குத் தங்களில் ஒருவரைக் கண்டதும், அதிலும் அவர் பல்லக்கில் வருவதும், கூட்டம் கூடியிருப்பதைக் கண்டதும், பொறுக்கமுடியவில்லையே. அவருக்குச் சின்னங்கள், ஊது வாங்காக்கள், என்ன ஆடம்பரம் பார்த்தீர்களா? உண்மையான அன்பனாக விருந்தால் இந்த வீண் ஆரவாரம் எதற்கு ? நமது அரசியாரும், அமைச்சரும், இதற்குக் கொஞ்சம் ஒத்திருப்பதால்தான் இவ்வளவு கோலாகலம். ஊர் மக்களையும் ஒன்றிலும் நம்ப முடியவில்லை. "சூரபன்மனின் வாலில்லாக் கிளைகள்" என்று சொல்லுவதுபோல் தானிருக்கிறது. இன்று அவர் சிவிகையோடு, கூட்டத்தைப் பார்த்தீர்

களா? அவர்கள் பாட்டைப் பார்த்தீர்களா? ஆனால் கேட்ப தற்கு இனிமையாகத் தானிருக்கிறது. இதனால்தானே, மக்கள் ஏமாந்து போகிறார்கள். நாம் பேசாது இருந்துவிடக்கூடாது. ஊறும்போதே துடைத்துவிடுதல் வேண்டும். சிறிய பகை யெனினும் வேரோடு பறித்தெறிதல் வேண்டும். என் செய்வது இப்பொழுது.

மற்றொரு குருக்கள்:—தாங்கள் சொல்லிய யாவுஞ் சரிதான். இன்று இந்தச் சைவர்கள் கொண்டுள்ள மகிழ்ச்சி யைக் கண்டு, என் மனம் பொறுக்க முடியாத துன் படைகின்றது. நாம் யாவரும் சேர்ந்து இப்பொழுதே அரசனிடம் சென்று, அவரை நம் வயப்படுத்திக் கொண்டு, இந்தச் சைவக் கிழங்கள் தங்கியிருக்கும் இந்த மடத்தைத் தீக்கிரையாக்கி விடுவோம். இன் றிரவே செய்துவிடவேண்டும். அப்படிச் செய்தால், இந்த ஆட்டபாட்ட மெல்லாம் ஒடுங்கி, நாளைக் காலை இருந்த இடந் தெரியாது, எல்லாரும் ஓடிவிடுவார்கள்.

மற்றொரு குருக்கள்:—அதுவே சரியான எண்ணம். அப்படித் தான் செய்ய வேண்டும். என்ன அட்டகாசமய்யா! ஒருத்தர் தாளம், ஒருத்தர் ஆட்டம், ஒருத்தர் கொடி பிடித்தல், ஒருத்தர் சாமரம் இரட்டல், என்ன பெருமை, எழுந்திருங்கள் யாவரும். இப்போதே மன் னன் பால் ஏகுவம்.

(எல்லாரும் எழுந்து மாலைக்கருகருத்த நேரத்தில் மன்னன் அரண்மனை யடைந்தார்கள்.)

நான்காம் அங்கம் - இரண்டாங்காட்சி

இடம்:—அரசன் அரண்மனைக் கொலுமண்டபம்.

காலம்:—மாலைப்பொழுது.

நடர்:-அமண்குருக்கண்மார், கூன்பாண்டியர், முதலியோர்.

அரண்மனைக் காவலர்:—(அமண்குருக்கண்மார்கள் காவலரை நோக்கி)

"வெற்றி வேலவர்க்கு எங்கள் வருகையை விளம்புவீர்"
(காவலர் அரசன்முன் சென்று வணங்கி)

மன்னருள் ஏறே!

"அடிகண்மார் கூட்டமாய் நம் வாயில்முன் வந்தனர்." தங்களைக் காண வேண்டினர்.

மன்னர்:—"அடிகண்மாரை விரைவின் இங்கு வரவிடுக."

நான்காம் அங்கம்: இரண்டாம் காட்சி:

பாயுடுத்திச் செல்லும் அமண்குருக்கண்மார் மனப்பதைப்புடன் உட்சென்றார்.

கூன்பாண்டியன் :—"வணங்கி" அடிகண்மீர், நலமா? நீவிர் யாவரும் ஒருங்கு திரண்டு இப்போது வந்ததுஎன்ன? அவ்வாறு வரும்படி உங்களுக்கு உற்ற இடர் என்ன?

அமண்குருக்கண்மார் :—அரசே :—சொல்ல முடியாது—அவ்வளவு, பெருந்தீங்கு உற்றது.

மன்னர் :—அப்படியா! அவ்வளவு பெருந்தீங்கு என்ன? அடுத்தது கூறுக. கூடியவாறு தீர்க்க முயலுகின்றேன்.

அடிகண்மார்:—மிக்க வலிமை யுடைய மன்னவ!

அமணர் தலைவனுயுற்ற உமது மதுரையில், சைவ வேதியர் மேவலால் "கண்டுமுட்டி" யானேம் (என்றார்கள்)

மன்னர் :—யானும் "கேட்டு முட்டி" யானேன். (சிறிதுநேரம் ஒன்றும் உரையாது இருந்து—பின் வெகுளிச் சிரிப்புச் சிரித்து) நன்று! நான் புரிந்த அறம்! இன்று எம் மாநகர் அணைந்தது என்? அவர்கள் யாவர்?

அடிகண்மார் :—

மறைச் சிறுவன், தன் கூட்டத்தோடு, முத்துச்சிவிகையில், வந்திருக்கிறான். சோழ நாட்டுச் சீகாழியிலுள்ளானும். அவ்வூர் சடைக்கடவுள்பால் ஞானம் பெற்றுளனும். "எங்களை வாதில் வெல்ல" என்றே இங்கு வந்திருக்கின்றானும். இன்று, அவனைக்கண்டதும், இங்குள்ள சில சைவர்களும் சேர்ந்து

கொண்டு செய்த அட்டகாசம் அளவில்லை. ஒரு மடத்தில் தங்கியிருக்கிறார்கள். அவரைக் கண்டதும், ஏதோ, ஒரு வெற்றி வந்து விட்டதுபோல, இந்தச் சைவர்கள் அவருக்கு விருந்து செய்வதும், வணங்குவதும், ஊது சின்னங்கள் கொண்டு ஊதுவதும், இப்படியாக, இன்று அவர்கள் செய்வது, எங்களால் சொல்லுந் தரத்ததன்று.

மன்னர் :—(நமது பிள்ளையார் பெயர் முதலிய கேட்டதும், வெருண்டு, கூறுவான்) அப்படியா? மாமறை மைந்தனு? நன்று! நாம் இப்போது செய்யவேண்டுவதென்ன?

அமண்குருக்கண்மார் :—(மன்னன் சீற்றமுற்ற தன்மையைக் கண்டு) மன்ன, நாம் வலிசெய்து போகச்செய்வது முறையன்று.

அமண்குருக்கண்மார் :—

நமக்கு அடுத்ததும் அன்று. (சிறிது நேரம் எல்லாரும் கலந்து கொண்டிருத்தல்) மன்னே! ஒன்று செய்வது நலமென எண்ணுகிறோம். அதாவது, அவர்கள் உறை மடத்தில், மந்திரத் தொழிலால், தீவைத்து விட்டால், இந்த நல்ல ஊரை விட்டு விட்டு மறைச் சிறுவன் தானே ஓடி விடுவான். அவன் ஓடி விட்டால், பின் எல்லாரும் போன இடம் தெரியாது போய் விடுவார்கள்.

மன்னர் :—"ஆவதொன்று இதுவே யாகில்" அதுவே செய்யுங்கள். விரைந்து போங்கள்.

(அமணர்கள் யாவரும் தங்கள் எண்ணம் முற்றியதென எழுந்து போதல்)

நான்காம் அங்கம்: மூன்றாங் காட்சி.

இடம்:—மதுரை அரண்மனை.

காலம்:—மாலைப்பொழுது, முன் இராப்போது.

நடர்:—கூன்பாண்டியன், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் முதலியோர்.

மங்கையர்க்கரசியார் :—(மன்னர் ஒன்றும் உரையாடாது பூவணைமீது இருந்தார். மங்கையர்க் கரசியார் எதிரணைந்து, மன்னர் துயர்கண்டு வினவல்) என்னுயிர்க் குயிராயுள்ள இறைவ !,

என்கவலுற்றது ? முன்னுள மகிழ்ச்சி இல்லையே. முகம் வாட்டமுற்றிருக்கின்றதே, கவலை இதுவென அருள் செய வேண்டும். (என்று வருந்திக்கேட்டார்).

மன்னர் :—அழகிய கண்ணினாய்,

காவிரிநாட்டுச் சீகாழியிலிருந்து, சங்கரன் அருள் பெற்று, அடிகண்மாரை வாதினில் வெல்ல என்று, ஒரு மறைச்சிறுவன் இங்கு உற்றான். நீறுபூசுந் தொண்டர் அவனைச் சூழ்ந்துளார். அக்கோலங்கண்டு, அடிகண்மார் "கண்டு முட்டி" யாயினர். நானும் அவர்கள் கூறக் "கேட்டு முட்டி" யாயினேன். காதல் மானியே !, பண்பு மற்றிதுவே ! பரிசு வேறில்லை.

மங்கையர்க் கரசியார் :—என் உறை மனனே,

வருந்த வேண்டாம். இதுதானா ? இது தெய்வத்தன்மையே ! வாது செய்தால், வென்றவர் பக்கம் துன்னுவது உறுதி.

(மன்னன் கவலை நீங்கி மனமகிழ்ந்திருத்தல்)

நான்காம் அங்கம்: நான்காம் காட்சி

இடம்:—அரண்மனை ஒரு சார்.

காலம்:—முன்னிரவு.

நடர்:—மங்கையர்க் கரசியார், தோழிமார்கள், குலச்சிறையார்.

மங்கையர்க்கரசியார்:—(மன்னன் மகிழ்வுற்றதும், தானும் களிப்பு மிக்குப்போக, குலச்சிறையார் அங்கு வந்தெய்தக் கண்டு கூறல்)

அமைச்சரே,

நமது மன்னரும் அருள் வழிப்பட்டார். இப்போது நிகழ்ச்சி

யிலறிந்தேன். நமது வள்ளலார், கூட்டத்தோடு, வாது செய்ய வந்தார் என்று கேள்வியுற்று, மிகக் கவலையோடிருந்தார். நான் சென்று, அவர் கவலை கேட்டேன். தெரிந்தேன். வருந்துவா னேன் "வென்றவர் பக்கம் சேர்வம்" நமக்கென், யாராயின்? என்றேன். உடனே மன எழுச்சி கொண்டு, சரிதான் என்று மகிழ்வுற்றார். இதுவும் நமக் கொரு நற்குறியே.

குலச்சிறையார்:—அருள் நிறை அம்மையாரே, (என்று தலை, கைகுவித்து நின்று)

நமது பிள்ளையார் இங்கு இன்று வந்து ஒன்றுஞ் செய்ய வில்லையே. அப்படியிருந்தும், நமது மன்னரிடம், இவ்வமணர் கள் சென்று, ஏதோ தப்புந்தவறுமான எண்ணங்கள் படும்படி சொல்லித்தானே இவ்வாறு நமது மன்னர், கவலைப் படும்படியா யிற்று. இன்னும் இந்த வஞ்சகர்கள் என்ன மாயங்கள் செய் யப்போகிறார்களோ? நமது சொல்லுறுதி கொண்டன்றோ, நமது பிள்ளையார் இங்கணையும் பேறு பெற்றோம். கண்குளிரக்கண்டு, வணங்கவும் பெற்றோம். இனி, என் நிகழுமோ? அறியேன். (என்று கவலையுற்றார்).

மங்கையர்க்கரசியார்:—(உடனே அஞ்சினார். கண்ணீர் வடித் தார்) சொல்வது சரியே. இவ்வமணர்கள் கொடிய வஞ்சகர்களே. ஈனமே புரிபவர்களே. என்ன செய் வார்களோ? அமைச்சரே, அப்படி ஏதாவது "நன் மையல்லாத செய்து ஊனம் வரின்" யாமும் உடனே உயிர் துறந்து ஒழிவம். (தொடரும்)

குடியும் மீதூண் விரும்பலும்

[காழி. சிவ. கண்ணுசாமி B. A.]

"குடித்தல்" "பெருந்தீனி தின்னல்" என வழக்காற்றிற் கூறப்பட்டு வரும் இரண்டும் மக்கட் செய்கைகளல்லாது மாக் களின் செய்கைகளாகவே கற்றோராலும் மற்றோராலும் கருதப்

பட்டு வருவதால் வெறுத்தொதுக்கற் பாலனவேயாம். இஸ் ரலேட்ஸ் என்ற மக்கட் கூட்டத்தினர்க்கு மோசே என்பவர் கடவுள் வாக்கென எடுத்தியம்பியதாகக் கிறித்துவநூலிற் காணக்கிடப்பது என்னவெனில் "இவ்விரண்டு கெட்ட பழக்கங் களும் படிந்துள்ள ஒரு சிறுவனை அவன் பெற்றோர்கள் பொது மன்றத்திற் கழைத்துச் சென்று அங்கே குழுமியிருக்கும் நாட் டுப் பெரியோர் முன் 'எங்கள் மகனாகிய இவன் சொன்னது கேட்பதில்லை; அன்றியும் பெருந்தீனி தின்னவும் குடிக்கவும் பழகியிருக்கிறான். நீங்கள் எல்லீருங்கூடி இவனை நடுத்தெரு வில் விட்டுக் கல்லாலடித்துக்கொன்று விட்டால் நலம்', என்று கூறவேண்டும்" என்பதே.

ஈண்டுக் குறித்தது சால் வயிறர்களையும் மிடாக் குடியர் களையுமே. ஆனால் கடை கெட்ட இப்பழக்கங்களே யன்றி முறையாக உண்ணும் மூன்று வேளைகளிலும் மிகுந்த நேரஞ் செலவு செய்து விதம் விதமாகச் சுவைபார்த்து உண்ணுதலும், ஒரு சிறிது குடிப்பதுங்கூடக் கண்டிக்கற் பாலதேயாம். உண்பது, குடிப்பது ஆகிய இச் செயல்களிற்கூட மிகவும் நாகரிகமாகவுந் திருந்திய வகையிலும் உண்டு குடித்து வருவதாக ஒரு சிலர் பெருமை பேசுகின்றனர். இவ்வாறு புரைபட்ட ஒரு பெருமை கருதி, இயற்கையில் எளிதாக நடைபெறவேண்டிய இச் செயல் களில் அருமையான காலத்தை வீணாகச் செலவு செய்கின்றோமே என்ற உணர்ச்சியின்றி அவர்கள் அதைப் பெருமையாக நினைத் திருப்பது அந்தோ, வெட்கம்! வெட்கம்! என்றுதான் சொல்ல வேண்டும். "என்னென்ன உண்கிறார்கள், எவ்வளவிற்கு உண் கிறார்கள் என்பதையாம் கண்டிக்கவில்லை; ஆனால் இன்னின்ன தை யுண்ணல் வேண்டும் இவ்வளவிற்குக் குடித்தல் வேண்டும் என்ற அவாக்கொண்டுழல்வதையே மிகவும் வன்மையாகக் கண் டிக்கிறோம்" என்றொரு மேனாட்டுச் சான்றோர் கூறியுள்ளார். உண்பொருள்களிற் சிலவற்றைக் குறித்துக்கொண்டு அவை களையே எஞ்ஞான்றும் எப்பாடுபட்டேனும் உண்ணவிழை தலும், அப்படி யுண்ணுங்கால் இயற்கைக்கு மீறிய அளவுக்கு உண்ணவோ பருகவோ விழைதலும், அவ்விழை வேதுவாக

அவற்றைப் பற்றியே நினைவு கொண்டிருந்து செய்யக் கடவ வேலைகளையுஞ் செய்யாமற் கைநெகிழ விடுதலுங் கண்டிக்கற்பால வென்பதைக் கூறவும் வேண்டுமோ?

நன்ருக உண்ணவேண்டும், குடிக்கவேண்டும் என்ற அவா வயதேறியோர் மாட்டுக் காணப்படுதலே நன்றன்றெனின் இளை ஞர் மாட்டுக் காணப்படுதல் கூடாது என்பது எளிதிற் பெறப் படும். என்னை ? இத்தீய பழக்கங்களில் ஈடுபட்டாளெருரு இளை ஞன் அரையுயிர் இழந்தானென்றே கூறி விடலாமாகலின் கள் ளற்க, கொல்லற்க, களவொழிக என இளைஞர்க்கு அறிவு புகட்டு வது காவலர் கடமையே யன்றி நாவலர் கடமை யன்று. அவ் வாறு அறிவு புகட்டவே நீதிபதிகளும், காவலாளர்களும் அமைக் கப்பட்டிருக்கின்றனர். இன்னுங் கூறப்புகின், இழுக்கங்கள் என வரையறுக்கப் பட்டவற்றைப் பொது மக்கள் எல்லோருமே கண்ட விடத்தெல்லாம் கண்டித்து விடுகின்றனர். ஆனால் அவ் வரையறைக் குட்படாத இவ்விரண்டும தீச்செயல்கள் என்றோ இழுக்கங்களென்றோ கருதி யொதுக்கப்படுவதற்கு மாருக, ஒரு வாறு பெருமை யளிக்கும் செயல்களாகப் பிறழ உணரப்பட்டு வருகின்றன. இவைகளும் இவைபோன்ற சிறிய குற்றங்களும் எதிர்பாராத வகையில் மக்கள் தம் இன்ப வாழ்க்கையை அழிக்கவல்லன என்பது உறுதி எனவே பொதுவாக எல்லோ ரும், சிறப்பாக இளைஞரும், இச் சுழிகள் வாய்ப்பட்டுத் தடு மாறி யழியாமற் குறிக்கொண்டு நடந்து கொள்வார்களாக.

இனி, இவை தீய பழக்கங்களாகக் கருதப்படுதற்கான சிறப்பேதுக்களைக் கூறுவாம். குறிப்பிட்ட சுவை மிகுந்த சில வற்றையே உண்ண விழைவு கொள்வதால் அவற்றைச் சேகரிப்ப தில் நேரிடுஞ் செலவு பெரியதொன்ருக இருக்கிறது. சேகரித்த அவைகளை வேண்டியவாறு சமைத்தற்கு நேரிடுஞ் செலவு ஏறக் குறைய அதே அளவிற்று. இவ்வெட்கக் கேட்டை என்னென்று எடுத்தியம்புவது? ஒருவரது வயிற்றுப் பசியைத் தணிப்பதற் கென்று வேருெருவரிருவர் அதே வேலையாக விருந்து வேலை செய்துவர அமைக்கப் படுகின்றனர்! அதன்பின்

விறகென்றும், வறட்டி யென்றும், சருகென்றும், செத்தை யென்றும், கரியென்றும், "கெரோஸின்" என்றும் எத்தனை யெரிபொருள்கள்! பானையென்றுஞ் சட்டி யென்றும், கரண்டி யென்றும், அகப்பை யென்றும், தட்டென்றுந் தாள மென்று மெத்தனை துணைக் கருவிகள்! அடுக்களை என்றும், அடுப்பென்றும், கண்ணாடிச் சுவர் என்றும், கஞ்சி மேடையென் றும், எத்தனை கட்டடங்கள்!!! அம்மம்ம! இவ்வளவையும் சேகரிக்க என்ன பாடு? என்ன செலவு? இவ்வளவும் எதற் காக? ஒருவரிருவர்க்கு அவர்கள் வாய்க்குப் பிடித்த வகையில் உணவு சமைத்துக் கொடுப்பதற்காகவே. இந்த உணவருந்து வோர் பெரும்பாலும் வயிற்றுக்கு உணவு தேட வகையற்ற வர்களாக இருந்தாலு மிருக்கலாம்; என்னை? அவ்வாறிருப்ப வர்கட்கே உண்டிச் சுவையில் விருப்ப மிகுந்திருப்ப தியல்பாகக் காண்கின்றமாகலின்.

இனி, இத்துணைப் பாடுபட்டுப் பெருஞ்செலவிற் சமைத்து வைத்த பொருள்களைச் சுவைத்து உண்பதில் எத்துணை நேரம் வீணாகக் கழிகின்றது! காலையிலெழுந்தது முதல் இரவில் மீண் டும் படுக்கைக்குச் செல்வதற்குள்ளாக இயற்கையிற் கிடைக்கும் பதினான்கு பதினைந்து மணிநேரத்தில் ஏறக்குறைய மூன்று அல் லது நான்குமணி நேரத்தை உண்பதிலும் பருகுவதிலுமாகக் கழிப்போர் எத்துணையோர்! இஃதென்னவென்று கேட்டாலோ, உண்பதைப்பிடித்தவரையில் வேண்டியமட்டும் ஆர அமர உட் கார்ந்து நுருங்க நுருங்கத் தின்றாலல்லவோ உடம்பில் ஒட்டும் என்ற விடையை யளிக்கின்றனர். அரிதிற் பெற்ற காலத்திற் புரிதற்குரிய செயல்களைச்செய்யாது கை நெகிழவிட்டு உண்டியோ உண்டியெனத்திரியும் ஒரு இளைஞன் வாழ்க்கையில் வேறெத்து றையிலாவது பணியாற்றத் தக்கவனாக இருப்பான் என்று கொள்ளவுங்கூடுமா?

இனி, இட்ட உணவிற் சுட்டுரைக்கும் இயல்புடைய ஒரு வரை அவர் நண்பர்களோ, உறவினர்களோ அழைத்து உண வளிக்க அழைத்து வந்த அவர் விருப்பத்தையொட்டி யுண வைச் சமைத்தளித்து மகிழ்விக்க முயல்வார்கள் என்பது உண்

மையே. ஆனால் இவ்வளவு முயன்றும், உண்டவர் உணவில் தாராதரம் பார்த்துக் கூறி இதில் ஒரு உப்புக் குறையின் அமுதம்போலிருக்கும். இதிற் சிறிது புளி குறைவாகக் காண்கிறது, தயிர் இவ்வாறுதான இருக்கவேண்டும் என்று கூறியது கண்டு மறுமுறை அவரை அழைக்கக் கருதுவார்கள் என்று நினைக்கவுங் கூடுமோ? என்னை; கட்டிய வீட்டிற்குப் பழுது கூறுவாரையும் அட்ட உணவிற்குச் "சொட்டு" ரைப்பாரையும் அறிந்தாராகக் கொள்ளுதல் உலக வியற்கையன்றுமாகலின். இனி மது வருந்தும் பழக்கமுடைய ஒருவராக இருந்து விட்டாலோ அவரை நண்பர்கள் உணவளிக்க அழைப்பதன் முன் ஒரு முறைக்கு நூறுமுறைத்திர ஆலோசித்தே அழைக்க முற்படுவார்கள். எனவே இப்பழக்கங்களாற் பெற்ற பயன் நண்பர்தம் இன்முகங் கோடவைத்தலேயாம்.

இறுதியாக, நோயற்ற வாழ்வே வாழ்வெனப்பட்டுக் குறைவற்ற செல்வமாகவுங் கருதப்பட்டு வருவது யாவரு மொப்ப முடிந்ததோர் உண்மை. பேரிரை கொள்ளலும் பெருங்குடி குடித்தலும் இறப்பிற் கேதுவாம் என்பதும் பலருமொப்ப முடிந்த உண்மைகளே. எனவே இத்தீய பழக்கங்களால் உடல்நிலைகெட்டு நோய்வாய்ப்படுதல் ஒருதலை. அற்றாலளவறிந்துண்க அவ்வாறுண்டால் தான் உடம்பு பெற்றான் ஒருவன் நெடிதுய்க்க எளிதாகும்; அஃதின்றிக் கழி பேரிரை யுண்டான் கண் நோய் நின்று உயிர்க்கு மாறுபாட்டையளிப்பது திண்ணம் என்று ஆன்றோர் அறைந்தனரன்றோ? எக்ளீஸியாஸ்டிகஸ் என்ற மேனாட்டறிஞர் கூறுவதாவது :—

"அளிக்கப்படும் உணவை அளவறிந்துண்க; உண்ணுங்கால் ஒழுங்காயுண்க, விழுங்கற்க; பந்தியிற் பலருடனிருந்து உண்ணுங்கால் முந்தி முந்தியென்றுகை நீட்டற்க, ஒரு சாண் வயிற்றிற்கு ஒரு பிடி குறைந்தாலெய்துங் கேடொன்றுமில்லை. அளவுடன் உண்டார் அயர்ந்து உறங்குவர். அன்றியும் அன்னார் உறங்கி யெழுந்தபின் உடல்நிலை சுறுசுறுப்பாயும் கலகலப்பாயுமிருக்கக் காண்பர். கழிபேரிரையாற் காணும் பெருநோய்; உண்டி சுருங்கிலோ உயிர் நீளும். மதுவருந்தி மதியிழவாதீர்;-

மதுவினால் மடிந்தோர் மட்டற்றோர்.'' ஒப்பரிய இப்படிப் பிணையை ஒவ்வொரு இளைஞரும் பொன்னே போற்கற்றுக் கற்ற பின் நிற்பர் அதற்குத் தகவெனின் எந்நாளும் எய்தார் இடும்பை.

தமிழ்ச் சித்த வைத்தியம்

[ஸ்ரீமத் விருதை. சிவஞான யோகிகள்]

இப்பொழுது இந்துமாக்கடலுள் மூழ்கியிருக்கும் (Submerged Land Lemuria) நாவலந் தீவினொரு பகுதியாகிய தமிழகமே மக்கள் முதற்கட்டோன்றிய நிலமெனப் புலவர் ஹேக்கல் (Prof. Hakel) முதலிய ஆங்கில சரித்திராசிரியர் பலர் கூறுகின்றனர். அத்தமிழகத்திருந்த தென்மதுரையிற்றான் தமிழ் முதற்சங்கம் இற்றைக்கு 16000 ஆண்டுகட்கு முன்னரே தோன்றிவிளங்கியது. முதற்கழகம் 4440 ஆண்டுகள் நடைபெற்றுக் கடல் கொள்ளப்பட்டுப் பின்னர் அதற்கு வடக்கணிருந்த கவாடபுரத்தில் தமிழ் இடைக்கழகம் 3750 ஆண்டுகள் நடைபெற்று அதுவுங் கடல்கோட்பட்டொழிந்தது. இவ்வாறிரண்டு தடவை தமிழகங் கடல்கோட்பட்டமையால் அதிலிருந்த தமிழ் மறைகளும்,' அரும்பெரும் நூல்களும் மூழ்கியொழிந்தன. அங்ஙனங் கடல்கொள்ளப்பட்டவைபோகக் கடல்கொள்ளப்படாத மற்றப்பகுதியிலிருந்த சித்தர் தமிழ் நூல்களில் வைத்தியம், வாதம், மந்திரம், யோகம், கற்பம், ஞானங்கூறுவன பல இலக்கக்கணக்கில் இன்றுமிருக்கின்றன. அவற்றில் ஆயிரத்திலொரு பகுதிகூட அச்சியற்றி வெளியிடப்படவில்லை. இடைச்சங்க காலத்தில் ஆரியர்களும், கி மு. 300-ல் கிரேக்கர்களும், கி. பி. 9-வது நூற்றாண்டில் முகம்மதியர்களும் இந்நாட்டில் வந்து குடியேறித் தங்கள் ஆதிக்கத்தை நாட்டினர். அந்நிய நாட்டார் தங்கள் மொழிகளையும் நூல்களையும் கொள்கைகளையும் நாட்டும பொருட்டுத் தீக்கும் ஆறுகளுக்கும் இரையாக்கப்பட்ட தமிழ் நூல்களுக்கு அளவில்லை. தமிழ் நூல்களில் ஆராய்ச்சியும் பற்றும் அற்ற தமிழர் தங்கள் தங்கள் வீடுகளிலிருந்த தமிழ்ச் சுவடிகளைக் கரையான் அரிக்கவும், மண் தின்னவும் விட்டு வைத்ததன்றி நாமகள் பூசை யிறுதியில் ஆற்றில் விட்டும்

ஆயிரக் கணக்கான நூல்களைத் தொலைத்தனர். உதாரணமாகச் சைவசமயாசிரியரியற்றிய தமிழ் மறையாகிய தேவாரத் திருப் பதிகங்கள் 103,000த்துக்குப் பாக்கள் 1030000த்துக்கு மேலா கின்றன. கரையான் தின்றொழிந்தது போக இப்பொழுது எஞ்சி யிருக்கும் பதிகங்கள் 795க்குப் பாக்கள் ஏழாயிரத்துச் சில்லரைதான் என்பதைக் கவனித்தால் நன்கு விளங்கும். தமிழ் மறையோதற்குரிய தமிழ்ப்பண்கள் 12000 வழங்கி வந்த தாய்த் தமிழ் இசை நூல்கள் பலகூற இப்பொழுது வழங்கும் பண்கள் 30க்கு மேல் காண்கிலம். அந்தோ ! நமது தமிழ் இசை நூல் தமிழர் உயிரோடிருக்கும் பொழுதே போற்றுவாரின்றி மறைந்து பட்டமைக்கு வருந்தாத தமிழரும் உளரோ ! மிகக் குறைந்துபோன சிறிய தொகையிலுள்ள பண்களையும் தெளி வாய்க் கற்பிக்கும் ஆசிரியர் மிகக் குறைவாயிருக்கின்றனர். இசை நூல்களும் பல ஒழிந்து போயின; அவ்வுண்மையை,

“ஏரண முருவம் யோகமிசை கணக்கிரதஞ் சாலம்
தாரண மரமே சந்தம்தம்ப நீர்நில முலோகம்
ஆரணம் பொருளென்றின்னமான நூல் யாவும்வாரி
வாரணங் கொண்டதந்தோ வழிவழிப் பெயருமாள்”.

என்ற பழம் பாட்டால் தமிழகத்தில் முற்காலத்திருந்த தமிழ் நூல்களின் மிகுதியையும் அவை கடல் கோளிற் பட் டொழிந்தமையையும் அறியக்கிடக்கின்றமை காண்க.

தமிழ்க் கடைச்சங்கம் இப்பொழுதிருக்கும் மதுரையில் கி. பி. இரண்டாவது நூற்றாண்டின் இடைக்காலம் வரை 1850 ஆண்டுகள் செழித்திருந்தன. கடைச் சங்கத்தில் மருத் துவன் தாமோதரனார் முதலிய தமிழ் மருத்துவப் புலவரு மிருந்தமை தெளிவு. இடைச்சங்க காலத்தில் மாபுராணமென்ற வைத்திய நூல் வழங்கினமையும் சரித்திர வாயிலா யறிகின் றோம்.

தமிழர் நாகரீகத்தின் தொன்மையையும் மேன்மையையும் பற்றிப் பல சரித்திராசிரியர் விரித்துக் கூறியிருக்கின்றனர். அவற்றில்,

Buddist India Page 156.

Our No. 2 Vedic, is largely subject to Dravidian influence, both in phonetics and in vocabulary. The Aryan Vernaculars throughout, and all the literary forms of speech. Pali Sanskrit and Prakrit are charged with it in a degree no less than that in which the descent and the blood relation-ships of the many people of India are charged with Non-Aryan elements and that is saying a Great deal.

புத்தர் இந்தியா என்ற நூலில் 156-வது பக்கத்தில் நமது 2 வது நம்பரிற்பட்ட வேதபாடை ஒலிகள், சொற்களாகிய இரண்டும் மிகவும் திராவிடபாடையின் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்தன. ஆரியசம்பந்தமான பேச்சு வழக்குள்ள நாட்டுமொழிகள் முழுவதும் பரவிச் சமஸ்கிருதம், பிராகிருத பாடைகளின் கல்வி சம்பந்தமான எல்லாச் சொற்களின் வடிவங்களும் இந்தியாவிலுள்ள பல ஆரிய ஜனங்கள் பரம்பரையிலும் இரத்தக் கலப்பிலும் ஆரியரல்லாத திராவிடரோடு எவ்வளவு அதிகமாய்க் கலந்திருக்கிறார்களோ அவ்வளவு அதிகம் திராவிடமொழிகள் கலந்துசேர்ந்திருக்கின்றன. அதாவது அதிக அளவு வந்து சேர்ந்திருக்கின்றது என்பது கருத்து என்றும்,

Ancient Indian in Mesopotamia,

By A. GHOSE.

When another champollion is found to unearth the deeply buried relic of the ancient Dravidian culture in all probability it will be discovered that lunar astronomy as well as the very First alphabet originated in India just as it is now being recognised that the advanced civilisation of ancient Mesopotamia, owed its Inception to the Sumurians from India. How far the world is thus indebted to the ancient Dravidians, as appears to be disclosed by recent researches,

is a subject which finds no place in the works of the modern historian of ancient India.

There is every reason to suppose that Pre-Aryan Dravidian culture flourished in their great home well endowed as it was by beautiful nature.

சாம்பாலியன் என்பவரைப்போன்ற இன்னொருவர் தோன்றிப் பழமையரான திராவிடருடைய (தமிழருடைய) ஆழத்திற் புதைந்துபோயிருக்கிற நாகரீகத்தின் குறிப்புகளை வெளிப்படுத்தும் பொழுது பழமையான மெசபட்டோமியாவின் மேலான நாகரீகம் இந்தியாவிலிருந்து வந்து அங்கு குடியேறின சுமேரியர் (திராவிடர்) ஆல் உண்டானதென்று எல்லா வகையாலும் கண்டு பிடிக்கப்பட்டதுபோலவே சாந்திரமான வானசாத்திரமும், மிகப் பழைமையான எழுத்துகளும் இந்தியாவில் முதன் முதல் உண்டானதென்று இபபொழுது எல்லாராலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இவ்வகையில் பழைய திராவிடர்க்கு உலகம் எவ்வளவு தூரம் கடமைப் பட்டிருக்கிறதென்பதைப் பழைய இந்தியாவைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் தற்கால சரித்திரக்காரரின் நூல்களிற் காணக்கூடவில்லை. திராவிட நாடு இயற்கையில் செழிப்புடையதா யிருந்தபடியால் ஆரியருக்கு முற்பட்ட திராவிடரின் நாகரீகமானது அவர்கள் பழைய பூமியில் செழித்து வளர்ந்ததாகக் கருதுவதற்கெல்லா ஆதாரமுமுள்ளன என்பது முதலிய மேற்கோள்களால் நன்கு விளங்கும்.

மெசபட்டோமியாவில் 10000 ஆண்டுகளுக்கு முன் எருதூர் ஆட்சி, அதன் பின் கழகியூர், அங்காடியர், (Accadians) சாலடியர் (Chaladians) முதலிய ஆட்சிகளைச் சுமேரியர் என்ற தமிழர் நாட்டிய சரித்திரங்களையும் ஆராயில் அவர் தொன்மை நன்கு விளங்கும்.

தமிழ் மருத்துவம் என்பதற்குத் தமிழ் வயித்தியம், தமிழ்ச் சித்த வைத்தியம், என்ற பெயர்களும் வழங்குகின்றன. ஆதலால் தமிழ் வைத்தியமே சித்த வைத்தியம்.

திருமந்திரம் 8000-ல் மருந்தின்சொற்பொருள் கூறுமிடத்து,

" மறுப்ப துடல்நோய் மருந்தென லாகும்
மறுப்ப துளநோய் மருந்தெனல் சாலும்
மறுப்ப தினிநோய் வாரா திருக்க
மறுப்ப துசாவை மருந்தென லாமே "

என்று நோய் வாராமற் காத்தல், வந்த உடல்நோய், உள நோய்களைத் தீர்த்தல், சாகாமல் நீண்டநாள் வாழ உடலை நிலைக்கச் செய்தல்களாகிய இயல்புகளையுடையது மருந்தென விளக்கப் பட்டுள்ளது.

அதனால் காப்பு நோய் வராமற் காக்குமருந்து, நீக்கம் வந்த நோயை நீக்குமருந்து, நிறைப்பு உடலிற் குறைந்த சத்துக்களை நிறைக்கும் மருந்து என மருந்து மூவகைப்படும். இவ்வாறு உலகினர்க்குப் பயன்படும் மருந்துகளும், உலோகங்களைத் தூயனவாக்கி மாற்றும் வாத மருந்துகளும், யோகிகளுக்கு நீண்ட ஆயுள்தரப் பயன்படும் காய கற்ப மருந்துகளும் தமிழ்ச் சித்தர் நூல்களிற் கூறப்படுகின்றன. நீண்ட ஆயுளைத்தரும் கற்ப மருந்துகள் துறவிகளுக்குப்போல மனைவியுடன் வாழும் உலகினர்க்கும் பயன்படும். இவையனைத்தும் தமிழ்ச் சித்தர் நூல்களிற் கூறப்படுகின்றன. நோயின்றி நீண்ட ஆயுள் பெற்று இனிது வாழும் பேற்றிலும் உயர்ந்தபேறுலகிலின்று. தமிழ்நாட்டிலும் உலகிலுள்ள பிற நாடுகளிலும் செல்வவானகளும் ஜமீன்தார்களும், கல்விவான்களும், அரசாங்க உத்தியோகத்தரும், பலகலை வல்லுநரும், அரசர்களும் தமிழ்ச்சித்த நூல்களின் உண்மையறிந்து ஆயுள் வளர்க்கும் மருந்துகளையும், காயகற்ப மருந்துகளையும், யோகத்தையும் தெரிந்து நீண்ட ஆயுளையும் இனிய வாழ்வையும் பெற்று மகிழாது சிறு காலவளவிற் கேடுறும் பிற மருந்துகளை அவை கற்றூர் புகழ் மொழிகளில் மயங்கி யுட்கொண்டு நோய் நீங்காது அற்ப ஆயுளில் பெறற்கரும் தம் உடலையும் இழந்துவிடுகின்றனர். இவ்வுண்மைகளை நன்குய்த்துணர்ந்து சித்த வைத்திய நூல்களின் ஆராய்ச்சிக்குத் தம்மால் இயன்ற உதவிபுரிந்து அதனால் விளையும் பெரும் பயனையடைய நம் நாட்டாரையும் பிறநாட்டாரையும் வேண்டுகின்றனன்.

(தொடரும்)